வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු






Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.03.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 75 பக்கங்கள் : 12


# தேர்தல்களைப் பிற்போட இணங்கப் போவதில்லை

## பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 15

**ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு ஒருபோதும் இணங்கப் போவதில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

எனினும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும். முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அதில் வெற்றி பெறுபவரின் கட்சி ஒரு வாக்கையேனும் கூடுதலாக பெற்றுவிடும்.

3இல் 2 பெரும்பான்மையை வழங்குவது ஏற்புடையதா என்பதை மக்கள் பரிசீலிக்க வேண்டும். இதனால்தான், அனைத்து கட்சிகளுக்கும் பாராளுமன்ற அங்கத்துவம் கிடைக்கவேண்டும் என்றே விகிதாசார தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இதன் நிலைமை தற்போது உங்களுக்கு தெரியும்.

இதேநேரம், தற்போதைய அரசாங்கம் பொது ஜன பெரமுனவின் அரசாங்கமா என்பது சந்தேகமே.

11



யாழ். இந்து



கொழும்பு இந்து

## ‘இந்துக்களின் போர்’ இன்று தொடங்குகிறது!

யாழ்ப்பாணம், மார்ச் 15

“இந்துக்களின் போர்“ என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு, இந்துக் கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக் கிழமை ஆரம்பமாகிறது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் இந்தப்

11

## யாழ். வருகிறார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய தபால் நிலையத்தில் உணவுப் பொருட்களை வெளிநாடுகளுக்கு

11

## வெடுக்குநாறியில் கைதானவர்கள் மூன்று நாட்களாக உணவு தவிர்ப்பு

### சட்டத்தரணிகள் தெரிவித்தனர்

வவுனியா, மார்ச் 15

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மூன்று நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர்களை நேற்று வவுனியா சிறையில் சென்று பார்வையிட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைதுசெய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19

11

## விசாரணை முடிவடையும் வரை கெஹலியவுக்கு பிணை இல்லை!

கொழும்பு, மார்ச் 15

வழக்கு விசாரணைகள் நிறைவடையும்வரை முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய உள்ளிட்ட ஐந்து பேரை பிணையில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் முன்னாள் சுகாதார

11

## புலம்பெயர் நாட்டில் கிளைகள் அமைக்க அனுமதி இல்லை!

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

வவுனியா, மார்ச் 19

இலங்கை தமிழ் அரசுக் கட்சி கிளைகள் புலம்பெயர் தேசத்தில் உருவாக்க அனுமதி வழங்கப்படவில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மேலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்

11

## அகதி முகாமில் பிறந்தோருக்கு சட்டத்துக்கு உட்பட்டு குடியுரிமை

### சென்னை உயர்நீதிமன்று உத்தரவு

சென்னை, மார்ச் 15

அகதிகள் முகாமில் பிறந்தவர்கள் குடியுரிமை கோரி விண்ணப்பித்தால் குடியுரிமை சட்டத்துக்கு உட்பட்டு பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என மத்திய அரசாங்கத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், சென்னையை

11

### வடக்கு தலைவர்கள் இணைந்தால்

## மீனவர்கள் பிரச்னைக்கு குறுகிய காலத்தில் தீர்வு

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

வடக்கு அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடன் பேச்சுகளில் கலந்துகொண்டால் மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். கச்சதீவு உரிமையை அடிப்படையாகக் கொண்டு மீனவர்களின் பிரச்னைகள் உதாசீனப்படுத்தப்படவில்லை - இவ்வாறு மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா

11

### இளம்குடும்பஸ்தர் கொலை:

## கடத்தல்காரர்களுக்கு கடற்படையினர் உதவி!

யாழ்ப்பாணம், மார்ச் 15

பொன்னாலையில் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட வட்டுக்கோட்டை இளம் குடும்பஸ்தரை கடத்துவதற்கு துப்பாக்கிகளுடன் நின்ற கடற்படையினரும் உதவி செய்வது முகாமில் இருந்த சி. சி. ரீ. வி. காணொலி பதிவு மூலம் தெரிய வந்துள்ளது.

தனது கணவரை கொல்வதற்காக கடத்தியவர்களுக்கு கடற்படையினர் உதவினர் என்று கொல்லப்பட்டவரின் மனைவி

11



### மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு

## நாள் சம்பளமாக 1,700 ரூபாய் 30 நாட்களுக்குள் கிடைக்கும்!

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, மார்ச் 15

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்கும். அவர்கள், நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாயை பெறமுடியும் என்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், மலையகத் தமிழர்கள் தமது தேசிய அடையாளத்தை சனத்தொகை கணக்கெடுப்பின்போது மலையகத் தமிழர் என வெளிப்படுத்துவதற்கான ஏற்பாட்டை உள்வாங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் அமைச்சர் கூறினார்.

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீயால்

11

## இப்படியும் நடக்கிறது

'மக்கள் மனு' - வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழுவினர் அண்மையில் நடத்தியிருந்த அரசியல் கருத்தரங்கு பற்றி ஓர் இணையத் தளத்தில் வந்திருந்த செய்தி 'கொடுப்புக்குள்' சிரிப்பை வரவழைத்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகளில் ஒன்றின் தலைமை அலுவலகத்திலிருந்து இயக்கப்படும் அந்த இணையத்தளத்தில் வெளிவந்திருந்த அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தவை பற்றியே இங்கே குறிப்பிடுகின்றோம்.

அந்த சிவில் சமூக குழுவின் கருத்தரங்கில் "ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வது" என்ற தலைப்பில் மூன்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். அந்த மூவருமே தமிழ் மக்கள் தமது இருப்பைப் பாதுகாக்க ஒரு பொதுவேட்பாளரை தேர்தலில் களம் இறக்க வேண்டும் என்றே கருத்துரைத் திருந்தனர். பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், செல்வின், யதீந்திரா ஆகியோரே அங்கு கருத்துரைத்தவர்கள்.

பொது வேட்பாளரை நிறுத்துவது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்கிறார்கள் அந்த இணையத்தளத்தினர். அதன் "லொஜிக்"தான் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. அவர்கள் நினைப்பது தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் வாக்களிப்பார்கள். அதனால், தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு வாக்களித்தால் ரணில் வெல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும் என்பது அவர்களின் கருத்தாக இருக்கவேண்டும்.

இதன்மூலம் அவர்கள் தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய சாதாரண விடயத்தைக்கூட அறியாதவர்கள் என்பதை உணர்த்துகின்றனர்.

ரணில் பற்றி என்ன கருத்து இருந்தாலும், சஜித்தா - ரணிலா என்றால் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பது சிறு குழந்தைக்கும் தெரிந்ததே.

சிலவேளை, தமிழ் அரசு கட்சியோ அல்லது மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளோ சஜித்துக்கு வாக்களிக்கக் கேட்டாலும் அவர்கள் சஜித்துக்கு வாக்களிப்பார்களா? என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் பொதுவேட்பாளர் என்பது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்கிறார்கள் அந்த இணையத் தளத்தினர்.

ஒரு பேச்சுக்கு அது சரியானது என்றே வைத்துக்கொள்வோம். அப்படியானால், ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதால் யாருக்கு இலாபம்? சிலவேளை அவர்கள் விரும்பும் சீனாவின் சார்புடைய அநுர வெல்வார் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை.

அதுதான் ஒன்றும் புரியவில்லை. இப்படி யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், நல்லூரில் நடந்த வெடுக்குநாறி சம்பவத்துக்கு எதிரான போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன் ஊடகங்கள் முன்னால் பேசிய காணொலி ஒன்றை நண்பர் அனுப்பியிருந்தார்.

அதனை பார்த்துக் கொண்டிருந்தபோது, இங்கே அவற்றை எழுதமுடியாத வாசகங்களுடன் அவர் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற சிறீலங்கா விமானப் படையின் கண்காட்சியில் ஆயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டமை அவருக்கு தலைகால் புரியாத கோபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை அவரின் பேச்சில் உணரமுடிந்தது.

"...வெடுக்குநாறியில் எங்களுடைய மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்ற போது, எமது மக்கள் யாழ்ப்பாண முற்றவெளியில் விமானப்படையினரின் கண்காட்சியில் போய் நிற்கின்றார்கள். உங்களுடைய பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினால் நீங்கள் போய் அப்படி நிற்பீர்களா? எங்கே உங்கள் அறிவுபோனது? நீங்கள் எல்லோரும் ஆதரவு வழங்கித் தானே முப்பது ஆண்டுகள் போராட்டம் நடந்தது. இவ்வளவும் நடந்தபிறகு நாங்கள் அந்த இடத்துக்குப் போகின்றோம் என்றால், பெத்த பிள்ளையை கூட்டிக் கொடுக்கின்ற செயல்பாடு. கட்டிய மனைவியை கூட்டிக்கொடுக்கின்ற செயல்பாடு....", என்கிறார் கஜேந்திரன்.

ஒரு கௌரவமான (மன்னிக்கவும்) பாராளுமன்ற உறுப்பினர் பொதுவெளியில் பேசிய பேச்சை கேட்கின்றவர்கள் அவருக்கு வாக்களித்தவர்கள் பற்றியும் எப்படி நினைப்பார்கள் என்பது தெரியாததல்ல. முற்றவெளியில் நடைபெற்ற விமானப் படையின் கண்காட்சிக்கு சென்ற ஒவ்வொரு பெண்களையும் அவர் இழிவுபடுத்தியிருக்கிறார். நமது பெண்களைப் பார்த்து வேறு இனத்தவர் ஒருவர் இப்படி இழிவுபடுத்தி பேசியிருந்தால் அவர் அதற்கு எதிராகவும் இன்று வீதியில் நின்றிருப்பார்.

அதற்காக விமானப் படை ஏதோ புனிதர்கள் என்றோ, அவர்கள் தமிழ் மக்களுக்கு நண்பர்கள் என்றோ நாம் வாதிடப்போவதில்லை. அவர்கள் தமிழ் மக்கள் மீது குண்டுகளைப் போட்டவர்கள் தான். ஆயிரக்கணக்கானவர்களின் படுகொலைக்கு காரணமானவர்கள் தான். அவை எல்லாம் நடக்கவில்லை என்றும் யாரும் வாதிடப் போவதில்லை.

ஆனால், அவர் சொல்கின்ற ஒரு நாடு இரு தேசம் என்பதை ஏற்றுக் கொண்டால், அங்கும் அதாவது, ஒரு நாட்டில் ஒரு விமானப் படைதான் இருக்கும். ஓர் இராணுவம்தான் இருக்கும். அப்போது நமது "தேசத்தின்" பாதுகாப்பையும் அந்த விமானப் படையும் இராணுவமும்தானே கவனிக்கும்?

விமானப் படைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு அந்தக் கண்காட்சியில் வைத்தே இருநூறுக்கும் அதிகமானவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

- ஊர்க்குருவி.

# ஐ. எம். எவ். பிரதிநிதிகளுடன் ஜே. வி. பியினர் சந்தித்து பேச்சு

கொழும்பு, மார்ச் 15

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) இலங்கைக்கான செயல்பாட்டுத் தலைவர் பீற்றர் ப்ருவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று கொழும்பில் நடந்தது.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம் மற்றும் இலங்கையில் மோசடி மற்றும் ஊழலை தடுப்பது தொடர்பான செயல்முறைகள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பீற்றர் ப்ருவருக்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சர்வத் ஜஹான், கட்சியரினா ஸ்விட்செங்கா மற்றும் மானவி அபே விக்ரம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய செயற்குழு உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய செயல்குழு உறுப்பினர் முடித நாணயக்கார மற்றும் பொருளாதார சபை உறுப்பினர்களான பேராசிரியர் அனில் ஜயந்த, பேராசிரியர் சீதா பண்டார, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

# தலைமன்னார் சிறுமி படுகொலை சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு!

மன்னார், மார்ச் 15

தலைமன்னாரில் 10 வயது சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிவான் கே. எல். எம். சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சான்றுப் பொருட்களின் இரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்காகவும் சிறுமியின் மரண விசாரணை முடிவை பெற்றுக்கொள்வதற்காகவும் இந்த வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் விளக்கமறியலும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் - ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி மாலை காணாமல்போன 10 வயதான சிறுமி மறுநாள் அந்தப் பகுதியிலுள்ள தென்னந்தோப்பிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய தூதுவர் சந்தோஷ், பஸில் ராஜபக்ஷ சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 15

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இரு தரப்பு உறவுகள், சமகால அரசியல் விடயங்கள், இருநாடுகளின் நலன்களுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது என என்று இந்த சந் திப்பு தொடர்பில் இலங்கைக்கான இந்திய தூதரகம் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள அபிவிருத்திகள் தொடர்பிலும் சிறுபான்மையினருக்கான விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன என்று கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார். (ஐ)

## அஸ்வெசும கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கும் திகதி நீடிப்பு

கொழும்பு, மார்ச் 15

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு - இரண்டாம் கட்டத்துக்கு எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இதற்காக ஒரு இலட்சத்து 30 ஆயிரம் புதிய விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் இன்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான இரண்டாம் கட்டத்துக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்றும் நிதி அமைச்சர் அறிவித்தார்.

## போதைப்பொருள் வர்த்தகர் எனக் கூறப்படுபவர் விடுதலை!

கொழும்பு, மார்ச் 15

முன்னணி போதைப்பொருள் வர்த்தகர் எனக் கூறப்பட்ட மொஹமட் ஷிரான் பாசிக் என்பவரை விடுவித்து விடுதலை செய்து உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் வழங்கிய சாட்சியங்களில் பலத்த முரண்பாடுகள் காணப்படுவதனால் அவரை விடுவித்து விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி கிருலப்பனை எட்மன்டன் வீட்டுத் தொகுதிக்கு அருகில் 4.53 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார் என்று வழக்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
15.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தந்திரங்களை புரியும் அறிவின் அவசியம்

மக்கள் திரட்டப்படும்போது - அதனை தமிழ்த் தேசியத்தின் பலம் என்று கூறுவோர் உள்ளனர். ஆனால், அவ்வாறு திரட்டப்படும் மக்கள் எந்த இலக்கின் அடிப்படையில் திரட்டப்படுகின்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். அவ்வாறில்லாது போனால் அந்தத் திரட்சி இறுதியில் மக்களின் பரந்துபட்ட நலன்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும். அண்மையில், மரணமான சாந்தனின் இறுதி நிகழ்வு இதற்கு ஒரு சிறந்த உதாரணம். அவர், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்டவர். அவ்வாறான ஒருவரின் அஞ்சலி நிகழ்வில் மக்கள் திரள்வது தடுக்கப்படவில்லை. ஒப்பீட்டடிப்படையில் ஏனைய நிகழ்வுகளின்போது காண்பிக்கப்பட்ட எந்தவொரு கெடுபிடிகளும் காண்பிக்கப்படவில்லை.

இதே போன்று, ஒப்பீட்டடிப்படையில் திலீபனின் நினைவுதினமும் பெரியளவில் கெடுபிடிகளின்றி அனுமதிக்கப்படுகின்றது. ஆனால், ஏனைய மாவீரர் தின நிகழ்வுகள் அவ்வாறான சுதந்திரத்தோடு அனுமதிக்கப்படவில்லை. இந்த விடயங்களை மிகவும் கவனமாக உற்றுநோக்கப் பழக வேண்டும். திலீபனின் நினைவு தினம் - அதேபோன்று, பூபதியின் நினைவு தினம் என்பன இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்துக்கு உரியவை. இவ்வாறான நிகழ்வுகளின்போது இந்தியாவுக்கு எதிரான கருத்துகள் தாராளமாக வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் அணுகுமுறையால்தான் குறித்த மரணங்கள் நிகழ்ந்தன என்றே இளைய தலைமுறையினருக்கு கற்பிக்கப்படுகின்றது. இதனால் யாருக்கு நன்மை - நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நன்மையில்லை.

சாந்தனின் நிகழ்வின்போதும் இந்தியாவுக்கு எதிரான கருத்துகளே முன்வைக்கப்பட்டன. இதனால் யாருக்கு நன்மை - நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நன்மையில்லை. சாந்தனின் இறுதி நிகழ்வுகள் மிகவும் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்ட சில தினங்களிலேயே வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகள் அதேயளவு சுதந்திரத்தோடு அனுமதிக்கப்படவில்லை. இது எதனை உணர்த்துகின்றது? இந்திய எதிர்ப்பு அரசியலுக்கான வாய்ப்புகள் ஊக்குவிக்கப்படுகின்றனவா? இதிலுள்ள தந்திரத்தை தமிழ் சமூகம் புரிந்துகொள்ளவில்லையா?

கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாக தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளுக்காக பல தளங்களிலும் போராடி வருகின்றனர். இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் இழந்தவைகள் ஏராளம். ஆனாலும், ஆகக்குறைந்த விடயங்களைக்கூட தமிழ் மக்களின் போராட்டங்களால் சாதிக்க முடியவில்லை. இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு போதிய அரசியல் அனுபவங்கள் உண்டு. என்னதான் தமிழ் மக்கள் தங்களை அர்ப்பணித்து போராடினாலும்கூட ஒரு கட்டத்துக்கு மேல் எதுவும் நிகழப்போவதில்லை. ஏனெனில், இந்த உலக ஒழுங்கில் நியாயத் தராசில் நீதி நிறுத்துப் பார்க்கப்படுவதில்லை. பலம்பொருந்திய நாடுகளின் நலன்களில் இருந்தே அனைத்தும் நிறுத்துப் பார்க்கப்படுகின்றன. இதற்கு வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உண்டு.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையிலிருந்து முன்னோக்கி செல்லுவதற்கு நண்பர்களை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். எதிரிகளை அதிகம் சம்பாதித்துக் கொள்பவர்கள் இறுதியில் அநாதரவாக அழிந்து போவார்கள் - அவர்கள் பக்கம் என்னதான் நியாயங்கள் இருந்தாலும் அந்த நியாயங்கள் பலம்பொருந்திய நாடுகளின் கண்களுக்குத் தெரியப்போவதில்லை. ஏனெனில், அவர்களின் கண்களுக்கு அவர்களது நலன்கள் மட்டுமே தெரியும்.

தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய இயக்கங்கள் எத்தனையோ தியாகங்களை செய்திருந்தாலும்கூட இறுதியில் அந்தத் தியாகங்கள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீரானதே வரலாறு. எனவே, தமிழ் மக்கள் அதிகம் நண்பர்களை திரட்டிக் கொள்ள வேண்டும். இந்திய எதிர்ப்பு எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு நண்பர்களை திரட்டிக்கொள்ளப் பயன்படாது. மக்களின் நியாயங்களை எடுத்துக் கூறலாம் - அது கட்டாயமானதும்கூட - ஆனால், நட்பை பேணியவாறுதான் அதனை வலியுறுத்த வேண்டும். நாங்களாகவே அளவுக்கதிகமாக எதிர்பார்த்துக் கொண்டு அதனை மற்றவர்கள் நிறைவேற்றவில்லை என்று ஆதங்கப்படும் போது எதிர்ப்புணர்வே மேலோங்கும். எங்களுடைய எதிர்பார்ப்புகளை மற்றவர்கள் தங்களின் நலன்களிலிருந்துதான் நோக்குவார்கள் என்பதை மறப்பதால்தான் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

# இலங்கையில் இராணுவ வசதி பரிசீலித்து வருகின்றது சீனா!

## அமெரிக்க புலனாய்வு அறிக்கை

*வாஷிங்டன், மார்ச் 15*

இலங்கை உட்பட பல நாடுகளில் இராணுவ வசதிகளை தொடர சீனா பரிசீலித்து வருகிறது என்று அமெரிக்க புலனாய்வு அறிக்கை ஒன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வசதிகள் கிழக்கு ஆபிரிக்காவில் - செங்கடலுக்கு அருகாக உள்ள ஜிபூட்டி நாட்டில் உள்ள இராணுவத் தளம் கம்போடியாவில் உள்ள கடற்படைத்தளத்தின் இராணுவ வசதிகளுக்கு அப்பால்பட்டவை என்றும் தெரிய வருகின்றது.

2035ஆம் ஆண்டுக்குள் நவீனமயமாக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு மற்றும் இராணுவ படையை கட்டியெழுப்ப சீனா கவனம் செலுத்துகிறது. மேலும், 2049ஆம் ஆண்டுக்ககுள் சீனா உலகத் தரம் வாய்ந்த இராணுவமாக மாறும் என்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அமெரிக்க உளவுத்துறை சமூகத்தின் கூட்டு நுண்ணறிவுகளை கோடிட்டுக் காட்டும் இந்த அறிக்கை, அமெரிக்கா “பெருகிய முறையில் பலவீனமான உலக ஒழுங்கை எதிர்கொள்கிறது, பெரும் அதிகாரப் போட்டி, நாடுகடந்த சவால்கள் மற்றும் பிராந்திய மோதல்களால் கஷ்டப்படுகிறது” என்று கூறுகிறது.

சீனா, ஈரான் மற்றும் ரஷ்யா ஆகியவை தற்போதைய சர்வதேச விதிகள் அடிப்படையிலான உலக ஒழுங்கை சவால் செய்கின்றன என்று அது மேலும் எச்சரித்துள்ளது. (ஐ)

# தீயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சகல வசதிகளுடனும் வீடுகள் கையளிப்பு

*நுவரெலியா, மார்ச் 15*

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீயால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வசித்த குடும்பங்களுக்கு, குடிதண்ணீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் நேற்று வழங்கப்பட்டன.

அத்துடன், அவர்களுக்கு பிரத்தியேக “முகவரி“ வழங்கப்பட்டு, வீடுகளுக்கு முன் வைப்பதற்கான கடிதப் பெட்டியும் வழங்கப்பட்டது.

ஒலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வாழ்ந்து வந்த 24 குடும்பங்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத் திட்டம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனினும், முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளே மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டு, குடிதண்ணீர், மின்சாரம், வீதி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்பிரகாரம் முழுமைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டமே நேற்று அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

# எதிர்க்கட்சிகளின் பலவீனமே அநுரவுக்கான ஆதரவு உயர்வு!

## ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்

*கொழும்பு, மார்ச் 15*

அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அதிகரித்துள்ளமைக்கு நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகளின் பலவீனமே காரணம் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.


பிரதான எதிர்க்கட்சியினர் ஆட்சி பொறுப்பேற்க தயாராக இருக்க வேண்டும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியின் செயல்திறன் குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவியது.

எனவேதான் மூன்றாவது கட்சியின் தோற்றம் நாட்டில் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதனால், ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டிய தேவை பிரதான எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

அதிகம் யோசிக்காமல் பிரதான எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் ஒன்றுபட வேண்டும். பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல முக்கிய தலைவர்கள் அரசாங்கத்தில் சேர விரும்பலாம். அதற்குள் அனைத்தும் சரியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் நடந்து வரும் தவறான புரிதல் இரு கட்சிகளின் தலைவர்களாலும் தீர்க்கப்பட வேண்டும், அதற்கான நேரம் இது - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**

அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்கும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**கடகம்**

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**சிம்மம்**

புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கன்னி**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**துலாம்**

பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**

குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும்.

**தனுசு**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**

திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர் களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

**மீனம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

# அண்ணாமலை, பழனிசாமிமீது முதலமைச்சர் அவதூறு வழக்கு

*சென்னை, மார்ச் 15*

போதைப்பொருட்கள் கடத்தல் விவகாரத்தில் தன்னைப் பற்றி அவதூறு கருத்து தெரிவித்தனர் என்றுகூறி, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆகியோருக்கு எதிராக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சார்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், போதைப் பொருட்கள் கடத்தல் விவகாரத்தில், ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டமை தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி என்னை தொடர்புபடுத்தி பேசியிருந்தார். இதே விவகாரம் குறித்து எக்ஸ் தளத்தில் காணொலி வெளியிட்ட அண்ணாமலையும் என்னை தொடர்புபடுத்தியிருந்தார்.

தமிழ்நாட்டில் போதைப் பொருட்களை ஒழிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், விழிப்புணர்வும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பேசிய எடப்பாடி பழனிசாமி மற்றும் அண்ணாமலை ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கோரியுள்ளார். (ஐ)

## அ. தி. மு. க.வா - பா. ஜ. கவா பா. ம. க. கூட்டணி யாருடன்?

*சென்னை, மார்ச் 15*

அ. தி. மு. கவுடன் கூட்டணி வைக்க ராமதாஸ் விரும்பும் நிலையில் பா. ஜ. கவுடன் கூட்டணி பேச்சை அன்புமணி நடத்தி வருவதால் பா. ம. க. யாருடன் கூட்டணி என்ற இழுபறி நீடித்து வருகிறது.

தமிழகத்தின் வடமாவட்டங்களில் கணிசமாக வாக்கு வங்கியை வைத்துள்ள பா. ம. கவை தங்கள் கூட்டணியில் சேர்க்க அ. தி மு. கவும், பா. ஜ. கவும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டன.

அ. தி. மு. க. தரப்பு பா. ம. க. நிறுவுநர் ராமதாஸுடன் பேச்சை தொடர்ந்து கூட்டணி உறுதியாகும் நிலை ஏற்பட்டது. ஆனால், அவரின் மகனும் பா. ம. கவின் தலைவருமான அன்புமணி, பா. ஜ. கவுடன் கூட்டணி வைக்கவே விரும்புகிறார் என்று கூறப்படுகின்றது.

அன்புமணியிடம் கூட்டணி தொடர்பாக பேச்சு நடத்திய பா. ஜ. க. குழுவினர் மத்திய அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் அ. தி. மு. க. கொடுப்பதைவிட கூடுதல் தொகுதிகளை வழங்குவதாக உறுதி அளித்துள்ளதாக தெரிகிறது. அத்துடன், பா. ம. கவுக்கு மத்திய அமைச்சு பதவியும் தர உடன்பட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அ. தி. மு. கவுடன் கூட்டணி வைக்க ராமதாஸும், பா. ஜ. கவுடன் கூட்டணி வைக்க அன்புமணியும் விரும்பும் நிலையில், இறுதியில் வெற்றி பெறப் போவது தந்தையா? மகனா? என்பது இன்னும் ஓரிரு நாளில் தெரிந்துவிடும். (ஐ)

## இரட்டை இலை சின்னத்திலேயே நாம் போட்டி

- பன்னீர்செல்வம் -



*சென்னை, மார்ச் 15*

பா. ஜ. கவுடன் பன்னீர்ச் செல்வம் அணியின் கூட்டணி உறுதியான நிலையில், 2ஆம் கட்ட பேச்சும் நடந்து முடிந்துள்ளது.

இதைத் தொடர்ந்து பன்னீர் செல்வம் கூறுகையில்,

எங்களுக்கு உறுதியாக இரட்டை இலை சின்னம் கிடைக்கும். அந்த சின்னத்தில் தான் நாங்கள் தேர்தலில் போட்டியிடுவோம். இரட்டை இலை பிரச்னைக்கான முடிவு இந்திய தேர்தல் ஆணையத்திடம் இருக்கிறது.

இரட்டை இலை சின்னத்துக்கான தீர்ப்புகள் அனைத்தும் தற்காலிகமானவைதான். கடந்த காலங்களில் யார் யார் எப்படி செயல்பட்டார்கள் என்பதை ஆராய்ந்து, சாதக, பாதகத்தை பார்த்து சின்னம் குறித்து தேர்தல் ஆணையம் முடிவு செய்யும் - என்றார். (ஐ)

## புதுச்சேரி அமைச்சராக திருமுருகன் பதவியேற்பு

*புதுச்சேரி, மார்ச் 15*

புதுச்சேரியின் புதிய அமைச்சராக திருமுருகன் நேற்று பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு, ராஜ்நிவாஸில் துணைநிலை ஆளுநர் தமிழிசை பதவி பிரமாணம் செய்து வைத்தார். அதைத் தொடர்ந்து, முதல்வர் ரங்கசாமி அவரை அமைச்சர் இருக்கையில் அமர வைத்தார். தொடர்ந்து பேசிய அமைச்சர் திருமுருகன், "காரைக்காலை முதன்மை மாவட்டமாக்குவேன்" என்று தெரிவித்தார்.

புதுவை அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பெண் அமைச்சர் சந்திரபிரியங்கா கடந்த ஒக்ரோபர் மாதம் நீக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து கடந்த 5 மாதங்களாக புதிய அமைச்சர் நியமிக்கப்படவில்லை. மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் கடந்த 1 ஆம் திகதி காரைக்கால் வடக்கு தொகுதியைச் சேர்ந்த என். ஆர். காங்கிரஸ் எம்எல்ஏ திருமுருகனை அமைச்சராக நியமிக்க குடியரசுத்தலைவர் ஒப்புதல் பெற்று அரசாணை வெளியிடப்பட்டது.

## "தி. மு. கவின் அவல ஆட்சியை தொடர்ந்து அம்பலப்படுத்துவோம்!"

*சென்னை, மார்ச் 15*

தி. மு. கவின் அவல ஆட்சியை அம்பலப்படுத்திக் கொண்டுதான் இருப்போம் என தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

"சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவனான முன்னாள் தி. மு. க. நிர்வாகி ஜாபர் சாதிக்கின் போதைப்பொருள் கடத்தல் கும்பல் பிடிபட்டு சுமார் ஒரு மாதம் ஆகிறது. தமிழகத்தில் உள்ள போதைப்பொருள் புழக்கம் குறித்து பிரதமர் மோடி கவலை தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகரித்து விட்டது என்ற உண்மையைக் கூறியதற்காக என் மீது அவதூறு வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

மக்களுக்கு தி. மு. க. ஆட்சியின் அவலம் தெரிந்து விடக் கூடாது என்பதற்காக, அவதூறு வழக்கு தொடர்ந்து எங்கள் குரலை முடக்கும் முயற்சி வெற்றி பெறாது. தொடர்ந்து மக்கள் மத்தியில் உங்கள் அவல ஆட்சியை அம்பலப்படுத்திக்கொண்டுதான் இருப்போம் - என்றார். (ஐ)

## இன்று தமிழகம் வருகின்றார் பிரதமர் மோடி

*நாகர்கோவில், மார்ச் 15*

பிரதமர் மோடி இன்று தமிழ்நாட்டுக்கு வருகிறார். இதையொட்டி கன்னியாகுமரியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் பா. ஜ. க. மற்றும் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பிரதமர் மோடி இன்று கன்னியாகுமரி வருகிறார். அங்கு, பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க பா. ஜ. கவினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தீவிர வாகன சோதனை நடைபெற்றது. (ஐ)

# இலவசத்தால்தான் நாசமாகியது நாடு!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 15

**அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பதுதான் பொருளாதாரம் வீழ்ச்சியடைய முக்கிய காரணம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த "இளைஞர் எமது எதிர்காலம்" என்ற சிநேகபூர்வ சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அதிகாரத்தைப் பெறுவதற்காக வழங்கிய அரசியல் வாக்குறுதிகளினால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தத் தவறை செய்ய நான் தயாராக இல்லை. நாட்டுக்கு சாதகமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் பாடுபட வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் விரைவாக ஏற்றுமதி பொருளாதாரத்திற்குத் திரும்ப வேண்டும்.

நம் நாட்டில் எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுத்தோம். வருமானம் இல்லாத போது மக்களுக்கு இலவச நிவாரணம் வழங்க பணம் அச்சிடப்பட்டது. இதனால், நாம் பெற்ற வெளிநாட்டுக் கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இறுதியாக, கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தோம். அரசாங்கம் என்ற ரீதியில் மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் போது, மக்களிடம் பணம் செலுத்தும் திறன் ஏற்படும். பணம் செலுத்தும் திறன் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க புதிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்-என்றார். (அ)



# நாடளாவிய ரீதியில் 1071 பேர் கைது!

கொழும்பு, மார்ச்

நாடளாவிய ரீதியில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 1071 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 986 சந்தேகநபர்கள் மற்றும் குற்றப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 85 சந்தேக நபர்கள் உட்பட மொத்தம் 1071 சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஹெரோயின் 1 கிலோ 785கிராம், ஐஸ் 261 கிராம் 104 மி.கி, கஞ்சா 14 கிலோ 606 கிராம், மாவா 104 கிராம் 500 மி.கி. என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 986 சந்தேக நபர்களில் 107 சந்தேகநபர்கள் பிடியாணை அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் போதைக்கு அடிமையான 42 பேர் புனர்வாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை வங்கியின் தலைவராக சாகல ரத்நாயக்கவின் சகோதரர்

கொழும்பு, மார்ச் 15

இலங்கை வங்கிக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி கொழும்பு பங்குச்சந்தைக்கு அறிவித்தது.

இலங்கை வங்கியின் புதிய தலைவராக காவன் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை தலைவராக செயல்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் பெரேரா, நேற்று முன் தினம் முதல் அந்தப் பதவியில் இருந்து விலகுவதாகவும் புதிய தலைவர் நேற்று முதல் கடமைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகரான சாகல ரத்நாயக்கவின் சகோதரரான காவன் ரத்நாயக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியாவார். (அ)

# இலங்கையில் தினமும் இருவர் காசநோயால் இறக்கிறார்கள்!

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் கண்டறியப்பட்ட காசநோயாளிகளில் இருவர் ஒவ்வொரு நாளும் இறக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

இலங்கையில் தொற்றா நோய்களில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களினால் அதிகளவான மரணங்கள் பதிவாகின்றது எனவும், கடந்த 2023ஆம் ஆண்டு இலங்கையில் 9358 காசநோய்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய காசநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அதிகளவான காசநோயாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும், அவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் இருந்து பதிவாகியுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் பதிவாகும் காசநோயாளிகளில் பெரும்பாலானோர் கொழும்பு மாநகர சபையில் பதிவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மருத்துவர்களின் கூற்றுப்படி, நுரையீரல் காசநோயின் அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இருமல், மாலையில் லேசான காய்ச்சல், எடை இழப்பு, பசியின்மை, அதிக இரவு வியர்வை, அதிக சோர்வு, சுவாசிப்பதில் சிரமம், சளியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்றவை.

காசநோய்க்கான பரிசோதனைகளை இலங்கையிலுள்ள அனைத்து மாவட்ட மார்பு மருத்துவ மனைகள் மற்றும் அரச சுகாதார நிலையங்களில் இலவசமாக மேற்கொள்ள முடியும் எனவும், மருத்துவ ஆலோசனையின்படி சரியான நேரத்தில் முறையான சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும் எனவும் காசநோய் எதிர்ப்பு நடவடிக்கையின் பணிப்பாளர் டாக்டர் பிரமித சாந்திலதா தெரிவித்தார். (அ)

# காடுகளுக்கு தீ மூட்டுவோர்மீது மிகக்கடுமையான நடவடிக்கை!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையை பயன்படுத்திக்கொண்டு சிலர் காடுகளுக்கு தீமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறானவர்களை கைது செய்து சட்டத்துக்கு நிறுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறோம் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது வறட்சியான காலநிலை ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக சில பிரதேசங்களில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதேபோன்று விவசாயப் பிரதேசங்களும் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படும் அபாயம் இருந்து வருகிறது.



இந்த வறட்சியான காலநிலை ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரும் எனவும் அதன் பின்னர் மழை பெய்யக்கூடிய சாத்தியம் இருப்பதாக காலநிலை மத்திய நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு இடம்பெறும் பிரதேசங்களுக்கு தேவையான நீரை பெற்றுக்கொடுக்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறோம்.

அதேபோன்று வறட்சியான காலநிலையை பயன்படுத்திக் கொண்டு சிலர் காடுகளுக்கு தீ மூட்டும் நடவடிக்கைகயில் ஈடுபட்டு வருகின்றனர். இது சட்டவிரோதமான செயலாகும்.

அவ்வாறான சம்பவங்கள் சில கடந்த சில தினங்களாக இடம்பெற்றுள்ளமை தொடர்பில் எமக்கு அறியக்கிடைத்திருக்கிறது. ஒரு சில இடங்களில் இது போன்ற நடவடிக்கைகள் இடம்பெறும் போது அதனை முப்படைகளின் உதவியுடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தோம்.

அத்துடன் காடுகளுக்கு தீ மூட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதனால் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கைதுசெய்ய பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறோம்-என்றார். (அ)

# போக்கற்றவர்கள் நரம்பற்ற நாக்குகளினால் கடலட்டைப் பண்ணை பற்றி தவறாக பேச்சு!

## அமைச்சர் டக்ளஸ் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

போக்கற்றவர்கள் நரம்பற்ற நாக்குகளினால் கடலட்டைப் பண்ணைகளை பற்றி தவறாக பேசுவதாக சாடியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளில் பல் தேசியக் கம்பனிகளோ சீனப் பிரஜைகளோ சம்மந்தப்பட்டிருப்பதை நிரூபிக்குமாறும் சவால் விடுத்துள்ளார்.

கடலட்டை பண்ணைகள் தொடர்பாக சமூக ஆர்வலர்களாக தம்மை அடையாளப்படுத்துவோர் சிலர் அவ்வப்போது வெளியிடும் கருத்து தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எமது மாவட்டங்களில் காணப்படும் வளங்களை பயன்படுத்தி அந்தந்த பிரதேச மக்களின் வாழ்வியலை கட்டியெழுப்பும் நோக்கோடு, விஞ்ஞான ஆய்வுகள் மூலம் சூழலியல் பாதுகாப்பை உறுதி செய்து மேற்கொள்ளப்படும் கடலட்டைப் பண்ணைகளை எழுந்தமானமாக விமர்சிப்பதன் மூலம் எமது மக்களுக்கு துரோகம் இழைக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# பாடசாலையில் உணவு விசமானதில் 9 மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, மார்ச் 15

நமுனுகுல - கனவரெல்ல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உணவு விசமானதில் 9 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் நேற்று காலை திடீரென சுகவீனமடைந்த நிலையில், பசறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரண்டு முதல் ஐந்தாம் தரங்களுக்கு இடைப்பட்ட வகுப்புகளில் கற்கும் மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 3 மாணவிகளும் 6 மாணவர்களும் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவு விசமானமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் திருட்டுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

**வலி. வடக்கு பிரதேசங்களில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் திருடர் கள் புகுந்து பெறுமதியான மரங்களை வெட்டி எடுத்துச் செல்வதுடன், வீட்டில் காணப்படும் பெறுமதியான பொருட்களையும் களவாடிச் செல்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 33 வருட காலமாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த சுமார் 67 ஏக்கர் காணி அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட தமது காணிகளுக்குள் உடனே சென்று மீள் குடியேற முடியாத நிலையில் காணி உரிமையாளர்கள் சில நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வதனால் விடுவிக்கப்பட்ட தமது காணிகள், வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டு திரும்புகின்றனர்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் காணி வீடுகளில் யாரும் இல்லாத நிலைமையை பயன்படுத்தி திருடர்கள் அப்பகுதிகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களை வெட்டுவதுடன் வீட்டில் காணப்படும் ஜன்னல், கதவுகளின் நிலைகள், இரும்புக் கம்பிகள் உள்ளிட்டவற்றை களவாடிச் செல்கின்றனர்.

கதவுகள் ஜன்னல் நிலைகளைக் களவாடும்போது வீடுகளையும் சேதமாக்குகின்றனர்.

திருடர்களிடம் இருந்து தமது வீடுகளையும், காணிகளுக்குள் உள்ள பொருட்களையும் ஒரு சில வாரங்களுக்கு பாதுகாத்து தருமாறு இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரிடம் தாம் கோரியபோதிலும், அவர்கள் திருடர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க பின்னடிப்பதாக காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# புதிய ஆயுதமாக பயன்படும் நாட்டின் உள்ளக சட்டங்கள்!

## மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 15

நாட்டு மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்கான புதிய ஆயுதமாக 'நாட்டின் உள்ளக சட்டங்கள்' இலங்கை அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரன தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தினால் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இணைய பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் தொடர்ந்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கம் புதிய சட்டவரைவுகளைத் தயாரிக்கும்போது அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடுதல் உள்ளடங்கலாக உரிய செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌஷல்ய நவரத்னவும் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரூபவாஹினிக்கு டயானா கமகே ரூ.9 இலட்சம் செலுத்தவேண்டும்!

கொழும்பு, மார்ச் 15

நவகமுவ பெரஹரவின் நேரடி ஒலிபரப்புக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட வேண்டிய 9 இலட்சம் ரூபாவை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே செலுத்தத் தவறியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற நவகமுவ பிரதேச விஹாரை ஒன்றின் 188 ஆவது ரந்தோலி பெரஹராவை நேரடியாக ஒளிபரப்புவதற்காக இந்தத் தொகை செலவிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

டயானா கமகேவின் வேண்டுகோளுக்கிணங்க ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் நவகமுவ பெரஹராவை நேரடி ஒளிபரப்பு செய்துள்ளது.

இந்நிலையில், குறித்த நிலுவைத் தொகை தொடர்பில் ரூபவாஹினி கூட்டுத்தாபன கணக்காளர் இராஜாங்க அமைச்சரிடம் பலமுறை நினைவூட்டியும் இதுவரை குறித்த தொகை வழங்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

(அ)

# ஓமானிலிருந்து இலங்கை திரும்பிய பெண்ணுக்கு மது கொடுத்து தங்க நகைகளை அபகரித்த நபர்!

கொழும்பு, மார்ச் 15

ஓமானில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்துவிட்டு இலங்கை திரும்பிய பெண்ணை ஏமாற்றி அவரிடமிருந்த சுமார் 12 இலட்சம் ரூபா பணம் மற்றும் உடைமைகளை அபகரித்துச் சென்ற நபரை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பேஸ்புக் ஊடாக குறித்த பெண்ணுடன் தொடர்பு கொண்ட சந்தேக நபர், அவருடன் நெருங்கிய உறவை வளர்த்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புத்தேகம மல்வனேகம பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடைய பெண் ஒருவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஓமானில் வீட்டு வேலைக்குச் சென்றிருந்த நிலையில், ஒரு நபருடன் அவர் பேஸ்புக்கின் ஊடாக நட்பை வளர்த்துள்ளார்.

சந்தேக நபர், குறித்த பெண்ணுடன் கொழும்புக்கு வந்து அவரது வங்கிக் கணக்குகளிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு அவரை கண்டிக்கு அழைத்துச் செல்ல முயற்சித்துள்ளார். இராணுவ முகாமுக்குச் செல்லவேண்டும் எனக் கூறிய அவர், கல்கமுவ பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று மதுபானம் கொடுத்து குறித்த பெண்ணை மயக்கமடையச் செய்து ஏழரை இலட்சம் ரூபா, தங்க நகைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், பணம் என்பவற்றை அபகரித்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்கமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# 30இற்கும் மேற்பட்ட குளவிகள் கொட்டி குடும்பஸ்தர் வைத்தியசாலையில்!

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் புதன்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் குளவித் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு-கைவேலிப் பகுதியிலுள்ள குடும்பஸ்தர் ஒருவரே நேற்று முன் தினம் மாலை 30 இற்கும் மேற்பட்ட குளவிகள் தாக்கிய நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அப்பகுதியிலிருந்து காற்றினால் கலைந்த குளவிகள் வீட்டிலிருந்த செல்லையா பரமலிங்கம் (வயது-62) என்ற குடும்பஸ்தரை கொட்டியுள்ளன.

இதனையடுத்து அவர் உடனடியாக புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

(அ)

# மாணவர்களுடன் சென்ற பஸ் விபத்து

கொழும்பு, மார்ச் 15

ஹோமாகம டிப்போவுக்குச் சொந்தமான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது.

தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனத்துக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே விபத்தில் சிக்கியுள்ளது.

குறித்த நிறுவனம் அருகே பஸ் கட்டுப்பாட்டையிழந்து ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மதிலின் ஒரு பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது பஸ்ஸில் மாணவர்கள் இருந்தபோதிலும் அவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# பாதாள உலகக் குழுக்களுக்கு அவர்களது மொழியில் பதில்!

## பொலிஸ் மா அதிபர் அதிரடி

கொழும்பு, மார்ச் 15

பாதாள உலகக் குழுக்களுக்கு அவர்களது மொழியிலேயே பதிலளிக்கப்படும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக இடம்பெற்று வரும் பாதாள உலகக் குழு தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸ் மா அதிபர் தென் மாகாணத்துக்கு நேரடியாக விஜயம் செய்தார்.

இதன்போது கொஸ்கொட பொலிஸ் நிலையத்தில் விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பொலிஸ் மா அதிபர் யுக்திய நடவடிக்கை நிறுத்தப்படாது என மீண்டும் வலியுறுத்தினார்.

பாதாள உலகக்குழு செயல்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் என்பனவற்றை இல்லாதொழிக்கும் வரையில் யுக்திய நடவடிக்கை தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்யும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுக்கு இனி எவ்வித மன்னிப்பும் கிடையாது.

தென் மாகாணத்தில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை தடுக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# அடக்குமுறைகளுக்கு எதிராக ஒருமித்துக் குரல் எழுப்புங்கள்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் கோரிக்கை

வவுனியா, மார்ச் 15

அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிக்கான பொறிமுறைகளை தேடும் நோக்குடன் ஜனநாயக போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது இந்த நாட்டில் தமிழ் மக்கள் மேற்கொள்ளும் அறவழியான போராட்டங்களைக் கூட நசுக்கும் வகையான உத்தரவுகளை வழங்கி கைது செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு மோசமான நிலையைக் காட்டுகின்றது.

ஆலயத்தை வழிபடுவதற்குக் கூட தமிழர்களுக்கு இன்று உரிமை இல்லை. இப்படியான நாட்டில் இனி நாம் எப்படி வாழமுடியும்.

வெடுக்குநாறி மலை ஆலயத்தில் பூசைப் பொருட்கள் கூட சப்பாத்துகால்களால் தட்டிவிடப்பட்டன. அப்பாவிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்து குரல் கொடுக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது- என்றார்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த கூட்டணி மே தினத்தன்று அறிவிப்பு!

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தகவல்



**கொழும்பு, மார்ச் 15**

**ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த புதிய கூட்டணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் இந்த புதிய கூட்டணி அறிவிக்கப்படும் என்று சுற்றுலாத் துறை, காணி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

கடந்த வாரம் இடம்பெற்ற ஐ.தே.க.வின் நிர்வாகக்குழு கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து முக்கிய பொறுப்புக்கள் சில சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதற்கமைய மே தினக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளுக்கான பொறுப்பு மற்றும் தேர்தல் பிரசாரம் என்பவை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே தனது ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மே தினக் கூட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே முதலாம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் வரலாற்றில் மிகப் பிரம்மாண்டமான மே தினக் கூட்டம் இம்முறை கொழும்பில் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. கொழும்பில் எங்கு இடம்பெறும் என்பதையும் தீர்மானித்துவிட்டோம். அது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும். ஐ.தே.கவின் மீண்டெழுகையையும் சக்தியையும் அன்று அனைவராலும் அறிந்து கொள்ள முடியும். அதே போன்று ஐ.தே.கவுடன் இணையவுள்ளவர்கள் யார் என்பது குறித்தும் அன்றைய தினத்தில் தெரிந்து கொள்ள முடியும்.

நாட்டிலுள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் தேர்தலுக்கான ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி கட்சி சார்பற்றவராகி, பிறிதொரு கட்சியில் கூட்டணியில் வேட்பாளராகக் களமிறங்குவார். ஆனால் ஐ.தே.கவின் தயார்நிலை மற்றும் ஏற்பாடுகள் அதேபோன்று ஆரம்பமாகும். காலி முகத்திடலை விட பிரம்மாண்ட தளத்தில் ஐ.தே.கவின் மே தினக் கூட்டம் இடம்பெறும்.

ஐ.தே.கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் எவையும் கிடையாது. மாறாக சிறு விரிசலொன்றே காணப்படுகிறது. இரு கட்சிகளினதும் தலைமைகள் இந்த விரிசல் தொடர்பில் பேசி தீர்வொன்றை எட்ட வேண்டிய காலம் இதுவாகும். கட்சி பேதமின்றி எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி 5 ஆண்டுகள் முயற்சித்தால் நாட்டை முழுமையாகக் கட்டியெழுப்ப முடியும். அதனை விடுத்து சவாலான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்காதவர்கள், ஆட்சி அதிகாரத்தைப் பெற்று நாட்டை கட்டியெழுப்பப் போவதாகக் குறிப்பிடுவது கேலியாகவுள்ளது-என்றார்.

(அ)

# போதைப்பொருள் கடத்தல் பணத்தில் வாங்கப்பட்ட இரு வீடுகள் பறிமுதல்!

கொழும்பு, மார்ச் 15

போதைப்பொருள் கடத்தல் பணத்தில் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 15 கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியான இரண்டு வீடுகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் பிரிவு கையகப்படுத்தியுள்ளது.

கிரிபத்கொடை மற்றும் வத்தளை பிரதேசத்தில் உள்ள நாட்டின் முன்னணி போதைப் பொருள் வியாபாரிகளுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் இரண்டு வீடுகளே இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கடவத்தை - கரகஹமுன பிரதேசத்தில் 10 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியில் கட்டப்பட்ட மூன்று மாடி சொகுசு வீடு ஒன்றும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டின், உரிமையாளர் தலைமறைவாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சபாநயகருக்கு எதிரான பிரேரணை; 19ஆம், 20ஆம் திகதிகளில் விவாதம்!



கொழும்பு, மார்ச் 15

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அத்துடன், குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சபாநாயகருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தாம் ஆதரவு வழங்கவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இதனை தெரிவித்துள்ளார்.

(அ)



# வெடிகுண்டு செயலிழக்க செய்யும் இயந்திரங்களை வழங்கியது சீனா

கொழும்பு, மார்ச் 15

சீன இராணுவ உதவித் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சுக்கு வெடிகுண்டுகளை செயழிலக்கச் செய்யும் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்ஹொங், பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே ஆகியோரிடம் குறித்த உபகரணங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் ஆவணத்தில் ஜெனரல் கமல் குணரத்தன கையெழுத்திட்டோடு, அவற்றை கையளிக்கும் ஆவணத்தில் சீனத் தூதுவர் கையெழுத்திட்டார்.

(அ)

# பிரிந்து சென்ற தொழிற்சங்க தலைவர்களை மீண்டும் அழைக்கும் ராஜபக்ஷ அணியினர்!

## தொலைபேசி அழைப்புகள் தொடர்கின்றன

கொழும்பு, மார்ச் 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் இணைச் சங்கங்களின் தலைவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் அரசியல் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான துரித வேலைத் திட்டத்தை உருவாக்குமாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச, கட்சியின் மூத்த உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவை சேர்ந்த பல தொழிற்சங்கங்கள், அதன் துணைச் சங்கங்கள் தற்போது புதிய கூட்டணியுடன் இணைந்துள்ளதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகின்றன.

இதன் காரணமாக பொதுஜன பெரமுனவின் தொழிசங்க அமைப்பு செயலிழந்து காணப்படுகிறது.

இந்த நிலைமையை எப்படியாவது தடுக்கும் நோக்கில் கட்சியின் நெலும் மாவத்தை அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. புதிய கூட்டணியில் இணைந்துள்ள தொழிற்சங்கத் தலைவர்களை மீண்டும் கட்சியில் இணையுமாறு கோரி தொடர்ந்தும் தொலைபேசி அழைப்புகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள புதிய கூட்டணியின் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அசங்க ஸ்ரீநாத், மீண்டும் எப்போதும், பொதுஜன பெரமுனவுடன் இணைந்து அரசியலில் ஈடுபட போவதில்லை எனக் கூறியுள்ளார்.

(அ)

# நெல் கொள்வனவுக்கு ரூ.50 கோடி

கொழும்பு, மார்ச் 15

நெல் கொள்வனவிற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 50 கோடி ரூபாய் நிதியை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாதுக்கை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறினார்.

இதற்கமைய சகல மாவட்டங்களிலும் இன்று முதல் குறைந்தது இரண்டு களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டிருக்கும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார். (அ)

# 10 நாட்களில் மாத்திரம் 67,000 சுற்றுலாவிகள்!

கொழும்பு, மார்ச் 15

இந்த மாதத்தின் கடந்த 10 நாட்களில் மாத்திரம் 67,114 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ரஸ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் இதுவரையில் ரஸ்யாவில் இருந்து 9783 பேரும், இந்தியாவில் இருந்து 9735 பேரும் ஜேர்மனியில் இருந்து ஆறாயிரத்து 301 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் மாத்திரம் 218,350 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# 2 பிள்ளைகளை கழுத்தறுத்து கொன்றுவிட்டு தந்தையும் தனது உயிரை மாய்க்க முயற்சி!

## பெரியநீலாவணையில் துயரம்

அம்பாறை, மார்ச் 15

**அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பகுதியில் இரு பிள்ளைகளை கழுத்தறுத்து கொன்றுவிட்டு தனது உயிரை மாய்த்துக் கொள்ள தந்தையொருவர் முயற்சி செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.**

சம்பவ தினமான நேற்று வியாழக்கிழமை காலை பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவு பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் இந்த சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்தில் இரு பிள்ளைகளின் சடலங்களும் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டன.

அத்துடன் தனது மனவளர்ச்சி குன்றிய இரு பிள்ளைகளைக் கொன்று உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்த தந்தையும் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த பிள்ளைகளின் தாய் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாக மேலதிக விசாரணைகளில் தகவல் வெளியாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# சாம்பல்தீவு தமிழ் ம.வியில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

திருமலை, மார்ச் 15

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பெற்றார்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு கலைப் பிரிவு வரை இயங்குகின்ற இப் பாடசாலையில் கடந்த சில மாதங்களாக முக்கிய பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர் இல்லை என பெற்றார்கள் தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

தரம் மூன்றாம் வகுப்புக்கு இதுவரை வகுப்பாசிரியர் இல்லாததால் அந்த வகுப்பு மாணவர்களைப் பெற்றோர் சில வாரங்கள் பாடசாலைக்கு அனுப்பவில்லை என கூறப்படுகின்றது.

அத்துடன் உயர்தர கலைப் பிரிவில் உள்ள தமிழ்மொழி பாடத்துக்குரிய ஆசிரியரும் இதுவரை இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல்களுக்கு புனித ரமழானுக்காக பேரீச்சம்பழம் வழங்கல்



அம்பாறை, மார்ச் 15

புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் காத்தான்குடி மீரா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் வைத்து பிரதேச பள்ளிவாசல்களுக்கான பேரீச்சம்பழம் வழங்கப்பட்டது.

காத்தான்குடி மற்றும் அதனை அண்டியுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 59 பள்ளிவாசல்களுக்கு தலா 20 கிலோ வீதம் பேரீச்சம்பழம் வழங்கப்பட்டதாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தொழுநோய் விழிப்புணர்வு

அம்பாறை, மார்ச் 15

கல்முனைப் பிராந்தியத்தில் தொழு நோயினால் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு முறையாக சிகிச்சையளிப்பதற்கும் வைத்திய ஆலோசனைகளை வழங்கும் பொருட்டும் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவினால் தொழுநோயாளர்களை அணுகும் விதம் மற்றும் சிகிச்சை நெறிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கொன்று அண்மையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.



பிராந்திய தொற்றுநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பசாலினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# மடத்தடி மீனாட்சியம்மன் சங்காபிஷேகமும் மரகதம் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும்

காரைதீவு, மார்ச் 15

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வும் “மரகதம்” வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9.00 மணி முதல் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதேவேளை, வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான “மரகதம்” நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் காலை 11 மணிக்கு ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற உள்ளது.

ஆலய பரிபாலன சபை ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந் நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அழைக்கப்பட்டுள்ளார்.

முதன்மை அதிதியாக ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும், ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(அ)



# மாங்காடு பகுதியில் இ.போ.ச பஸ் விபத்து

மட்டக்களப்பு, மார்ச் 15

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் மாங்காடு பகுதியில் நேற்று வியாழக்கிழமை இ.போ.ச. பஸ் ஒன்று விபத்தில் சிக்கியது.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியருகில் இரும்புத் தளபாடங்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வானத்தில் மோதுண்டதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் பஸ்ஸில் பயணித்தவர்களில் 5 பேருக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் உயிர் சேதங்கள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் அருகிலிருந்து பஸ் தரிப்பிடம் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளதுடன் பட்டா ரக வாகனமும், பஸ்ஸின் முன்பகுதியும் சேதம் அடைந்துள்ளன.

விபத்து தொடர்பில் களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# கொக்கு வேட்டைக்கு சென்றவர் துப்பாக்கி வெடித்ததில் மரணம்!

வாழைச்சேனை, மார்ச் 15

நண்பருடன் கொக்கு வேட்டைக்கு சென்றவர் துப்பாக்கி வெடித்ததில் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - சூடுபத்தினசேனை காட்டை அண்டிய பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், செம்மன்ஓடையைச் சேர்ந்த 32 வயதுடைய அத்துல் காதர் இம்தியாஸ் என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவரும் அவரின் நண்பரும் இரவு உணவுக்காக கொக்கு வேட்டைக்கு மாலை 5 மணியளவில் வீட்டிலிருந்து அரச அனுமதி பெற்ற துப்பாக்கியுடன் குறித்த காட்டு பகுதிக்குள் சென்றுள்ளனர்.

கொக்குகளை குறிபாத்து சுட முயற்சித்த போது துப்பாக்கி வெடித்ததில் துப்பாக்கியை இயக்கியவரின் கழுத்துப் பகுதியில் குண்டு பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அவருடன் கூடச் சென்றவர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்திற்கு தடவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

இதேசமயம், இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவருடன் கூடச் சென்ற நண்பரான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு



# ஹமாஸை ஒழிக்கும் வரை எங்கள் தாக்குதல் ஓயாது!

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

டெல் அவிவ், மார்ச் 15

**ஹமாஸ் அமைப்பினரை ஒழிப்பது என்ற இஸ்ரேலின் இலக்கை எட்ட, ரஃபா தாக்குதல் முக்கியமானது என இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.**

**இந் நிலையில் ரஃபா நகர் மீதும் தாக்குதலை நடத்த இஸ்ரேல் இராணுவம் திட்டமிட்டுள்ளது.**

**அதன்படி ரஃபா பாதுகாப்பான பகுதி என்பதனால், ஏனைய பகுதிகளிலுள்ள மக்களும் ரஃபா பகுதியில் வந்து தஞ்சம் அடைந்துள்ளனர்.**



இந்த நிலையில் ரஃபா பகுதியில் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ள இஸ்ரேல் இராணுவம், அங்கிருந்து மக்களை வெளியேறுமாறு உத்தரவிடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காசா முனைக்கு உதவிப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு ரஃபா எல்லையே முக்கியமானதாக காணப்படுகின்றது என்றும் ரஃபா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பாலஸ்தீன மக்கள் உதவிப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாது அவதிப்படும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

மேலும் இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 31 ஆயிரம் பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 80 சதவீத மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக காசாவின் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாயினும் ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை தங்களது தாக்குதல் ஓயாது என இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

(அ)



# ஆஸியில் வெள்ளத்தில் சிக்குண்டு காணாமல்போன குடும்பம் மீட்பு!

கான்பரா, மார்ச் 15

அவுஸ்திரேலியாவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு காணாமல் போயிருந்த ஒரு குடும்பம் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பம் கடந்த 3 நாட்களாக காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது காரில் அவுஸ்திரேலியாவின் மேற்கு பகுதியில் இருந்து பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போது வெள்ளம் காரணமாக அவர்களது கார் சேற்றில் சிக்கியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சியான சீரற்ற காலநிலையினால் அவர்களை தேடும் பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தடைப்பட்டிருந்ததாக அவுஸ்திரேலிய மீட்பு படையினர் குறிப்பிட்டனர்.

எவ்வாறாயினும், மீண்டும் முன்னெடுக்கப்படட்ட தேடுதல் நடவடிக்கையின் போது குடும்பத்தினர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)



# ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் மீது தாக்குதல்

## எரிபொருள் விலை அதிகரிக்கலாம் என அச்சம்

மொஸ்கோ, மார்ச் 15

ரஷ்யாவின் எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் மீது, உக்ரைன் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவின் சக்தி உற்பத்தி நிலையங்கள் மீது உக்ரையன் கடந்த சில மாதங்களாக தாக்குதல் நடத்தி வருகின்றது. அந்த வகையில் குறித்த தாக்குதலில் பாரிய அழிவினை ரஷ்யா சந்தித்துள்ளதாக நம்பப்படுவதாக உக்ரைன் சுட்டிக்காட்டியுள்ளது.

தாக்குதல் காரணமாக எரிபொருளின் விலையை 02 வீதமான அதிகரிப்பதாக ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

இதேவேளை அவர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றிற்காக காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரஷ்ய-உக்ரைன் மோதல் காரணமாக உலக வர்த்தகத்தில் தானியங்களுக்கான விலைகள் அதிகரித்திருந்த நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

(அ)

# பட்டினி ஒரு போராயுதமாக காசாவில் பயன்படுகின்றது

## ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது

பிரஸ்சல்ஸ், மார்ச் 15

காசாவில் பட்டினி ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக் கொள்கைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

காசாவுக்குள் போதியளவு மனிதாபிமான பொருட்கள் செல்ல முடியாமல் உள்ளதை மனிதர்கள் ஏற்படுத்திய பேரழிவு என ஜோசப்பொரொல் வர்ணித்துள்ளார்.

போதிய தரைப்பாதைகள் இல்லாததே காசாவில் உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடிக்கான காரணம் என ஐ.நாவில் உரையாற்றுகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கை தலைவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தற்போது தங்களது உயிர்வாழ்தலிற்காக போராடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.



காசாவிற்குள் மனிதாபிமான உதவிகள் செல்லவேண்டும் ஐரோப்பிய ஒன்றியம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது இது மனிதனால் உருவான நிலைமை கடல் மற்றும் வான் வெளி மூலம் விநியோகங்களை மேற்கொள்வதற்கான மாற்றுவழிகளை ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வீதிவழியாக மனிதாபிமான உதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் செயற்கையாக முடக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பட்டினி என்பது போர் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது உக்ரைனில் இது இடம்பெறும்போது கண்டிக்கும் நாங்கள் காசாவிலும் அதேவார்த்தைகளை பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஐ.நாவின் உணவு விநியோக மையத்தை தாக்கிய இஸ்ரேல்

ஜெருசலேம், மார்ச் 15

ராஃபாவின் தெற்கு பகுதியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விநியோக மையத்தை இஸ்ரேல் தாக்கியதில் 5 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த தாக்குதலில் 22 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ராஃபாவின் தெற்கு பகுதியில் தற்போது நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் தற்போது வரை காசா மீதான இஸ்ரேலிய தாக்குதலில் 31,272 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், 73024 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)



ஈழநாடு



# குடும்ப ஆட்சி இல்லையேல் மகிந்தவே சிறந்த தலைவர்!

## புகழாரம் சூட்டுகிறார் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 15

**கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியலுக்கு இடமளிக்காமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மை காலத்தில் உருவான சிறந்த தலைவராக மகிந்த ராஜபக்ச இருந்திருப்பார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ச எனக்கு பல கெடுதல்களை செய்தார், எனக்கு எதிராக கீழ்த்தரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். ஆனால் பாராளுமன்றத்தில் இன்று கண்டாலும் வணக்கம் சொல்லும் வழமை உள்ளது. ஒரு காலகட்டத்தில் அவர் எனது தலைவராக இருந்தார். அவரிடம் கீழ்த்தரமான பழக்கங்கள் இருப்பதுபோல நல்ல பழக்கங்களும் உள்ளன.

கொள்ளை அடிக்காமல், குடும்ப அரசியல் செய்யாமல் இருந்திருந்தால் இலங்கை அரசியலில் அண்மைய காலத்தில் உருவான சிறந்த தலைவராக அவர் இருந்திருப்பார் என நான் நம்புகின்றேன்.

இவ்வாறு நான் கூறுவதால் மகிந்த பக்கம் சாயப்போகின்றேன் என நினைக்க வேண்டாம். ராஜபக்சக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது.

அதேபோல ரணிலையும் மதிக்கின்றேன். அவர்தான் என்னை அரசியலுக்கு கொண்டுவந்தார். ஐக்கிய மக்கள் சக்தி என்பது குடும்ப சொத்து கிடையாது. நான் எனது ஆதரவாளர்களுடன் இருக்கின்றேன். எனக்கு வாக்களித்த மக்கள் பக்கம் நிற்கின்றேன்-என்றார். (அ)

# போதைப்பொருள் வியாபாரி கம்பஹாவில் வெட்டிக்கொலை!

கொழும்பு, மார்ச் 15

ஐஸ், ஹெரோயின் போதைப் பொருட்களை விற்பனை செய்து வரும் நபர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் கம்பஹா, கந்தானை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹைஏஸ் வாகனத்தில் வந்த நான்கு பேர் அடங்கிய வன்முறைக் கும்பல், மேற்படி நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், கொலைச் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்!

கொழும்பு, மார்ச் 15

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக நீர் பாவனை 15 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மேட்டு நிலப் பகுதிகள் மற்றும் நீர் விநியோகக் கட்டமைப்பின் முடிவிடங்களில் வாழும் மக்களுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படுவதாக சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும், எவ்வாறாயினும் இதுவரை எந்தவொரு பகுதிக்கும் நீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை என வடிகாலமைப்பு சபை கூறியுள்ளது.

இதனால் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மக்களை கேட்டுள்ளது.

# யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

## பாடசாலையில் மூன்று நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

பாடசாலை திறந்த வெளி அரங்கில் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மூன்று நாள் நிகழ்வுகளும் பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கண்ணன் கலந்து கொள்கின்றார்.

நாளை சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்துகொள்கின்றார்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்துகொள்கின்றார். (அ-2)

# மீன்பிடித் தொழிலுக்கு விரைவில் நவீன ஆழ்கடல் கப்பல் அறிமுகம்!

## இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தகவல்



கொழும்பு, மார்ச் 15

மீன்பிடித் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன செயற்பாட்டு முறைகளுடன் கூடிய புதிய ஆழ்கடல் கப்பலை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீன்பிடி தொழில்துறையின் வளர்ச்சிக்காக, மீன்களின் தரத்தை பாதுகாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் மீன்பிடி உபகரணங்களின் விலை அதிகரிப்பு காரணமாக மீனவர்களின் வருமானத்தில் ஓரளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் நிலைமையை தணிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.மீன்பிடித் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன இயக்க முறைகள் கொண்ட புதிய ஆழ்கடல் மீன்பிடிக் கப்பலை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிபுணர்கள் அடங்கிய குழு திட்டமிட்டு வருகிறது.

அதன் பணிகள் முடிந்ததும், புதிய மீன்பிடிக் கப்பல் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்படும். மீன்பிடி உள்ளீடுகளை நிர்வகிப்பதன் மூலம் நிலையான மீன்பிடித் தொழிலைப் பேணுவதே இதன் நோக்கமாகும்.

மேலும், சோலர் தொழில்நுட்பம் கொண்ட இயந்திர படகுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் எமது அமைச்சு கலந்துரையாடியுள்ளது.

மேலும், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் ஆதரவின் கீழ், இந்த நாட்டில் ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களுக்கு கப்பல் கண்காணிப்பு அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை, 2350 ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களில் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது, அடுத்த ஆண்டு முதல் காலாண்டு இறுதிக்குள், 4200 கப்பல்களிலும் கப்பல் கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்படும்.கப்பல் கண்காணிப்புத் தரவுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தளங்களை முன்னறிவிப்பதும் தற்போது ஆராய்ச்சி மட்டத்தில் செய்யப்படுகிறது.

இது தொடர்பான பகுப்பாய்வு மென்பொருள் தயாரிப்புப் பணிகள் தற்போது முடுக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு முதல் கப்பல் கண்காணிப்பு அமைப்பு முழுமையாக செயல்படும். -என்றார். (அ)

# விகாரை உண்டியலை உடைத்து கொள்ளையிட்ட பெண்கள் கைது!

கொழும்பு, மார்ச் 15

கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக உள்ள பூர்வாரம போதிமலு விகாரையின் உண்டியலை உடைத்து பணத்தை களவாடினர் எனக் கூறப்படும் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மதியம் 12.50 மணியளவிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீதிமன்றத்திற்கு முன்பாக போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேக நபர்களான பெண்கள் இருவரையும் கைது செய்து வாழைத்தோட்ட பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# பெரமுனவின் நிறைவேற்றுக்குழு இரு வாரங்களுக்குள் கூடவுள்ளது

கொழும்பு, மார்ச் 15

பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்றுக்குழுக் அடுத்த இரு வாரங்களுக்குள் கூடவுள்ளது என தெரியவருகின்றது.

கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில், பஸில் ராஜபக்சவின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள இக்கூட்டத்தின் போது தீர்க்கமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

அமெரிக்காவில் இருந்து பஸில் ராஜபக்ச நாடு திரும்பிய பின்னர், மகிந்தவுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் பஸில் சந்திப்பு பேச்சு நடத்தி இருந்தார்.

இதன்போது அடுத்த தேர்தல், அரச கூட்டணி உறவு மற்றும் எதிர்கால நகர்வுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தன்னை ஆதரிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கைக்கு ராஜபக்சக்கள் நேரடி பதிலை வழங்கவில்லை.

இந்நிலையிலேயே மொட்டு கட்சியின் உயர்பீடம் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் எட்டப்படும் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவுடன் மகிந்த, பஸில் 2ஆம் சுற்று சந்திப்பை நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது அடுத்த தேர்தல், கூட்டணி தொடர்பில் இறுதியான முடிவு எடுக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

## இந்துக்களின்...

பெருந்துடுப்பாட்டப் போட்டி நாளை சனிக்கிழமையும் நடைபெற வுள்ளது.

13ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தப் பெருந் துடுப்பாட்டப் போட்டியில் கடந்த வருடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெடுக்குநாறியில்...

ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் தமக்கான நீதி வழங்கக் கோரி அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உண்ணாவிரத போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் நீடித்தது. கைதுசெய்யப்பட்ட எட்டு பேரில் ஆலய பூசாரியார் த.மதிமுகராசா, தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன்,சு. தவபாலசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என்று சட்டத்தரணிகளான கொன்சியஸ் மற்றும் திலிப்காந் ஆகியோர் தெரிவித்தனர்.

இதனிடையே, நேற்று முன்தினம் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் வவுனியா சிறையில் எவரும் உண்ணாவிரதத்தில் ஈடுபடவில்லை என்று தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலம்பெயர்...

கிளைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக செயல்பட்டு வருகின்றன.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமை பெற்றவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் புலம்பெயர் நாடுகளில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயல்பாடுகளுக்கு ஆதரவாகத் தனியாகவும் தம்மை நிறுவனமயப்படுத்தியும் அந்த நாட்டு சட்ட வரம்புகளை கடைப்பிடித்து செயல்பட்டு வருகிறார்கள்.

அவர்களின் தாயக மக்கள்மீதான அக்கறையை எமது கட்சி என்றும் மதித்து செயல்பட்டு வந்துள்ளது.

அவர்கள் மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் - இயற்கை பேரிடரின் போதும் - பெருந்தொற்றுக்கு எமது மக்கள் முகங்கொடுத்தபோதும் மற்றும் கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடு போன்ற செயல்திட்டங்களிலும் நேரடியாகவும் எமது கட்சி உறுப்பினர்களூடாகவும் பல வருடங்களாக செயல்பட்டு வருகிறார்கள். அதற்கு எமது மக்கள் சார்பாக நன்றியுடையவர்களாக உள்ளோம். எமது கட்சியின் கொள்கைகளை ஏற்று இணைந்து செயல்பட விரும்பும் புலம்பெயர் உறவுகளுடன் செயல்பட கட்சி ஆயத்தமாக உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஐக்கிய இராச்சியத்தில் லண்டன் நகரில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளை அமைக்கப்பட்டதாக சில பத்திரிகை மற்றும் இணையத்தளங்களிலும் வேறு சிலவற்றில் "இலங்கை தமிழ் அரசு கட்சி போரம்" ( ITAK FORUM) அமைக்கப்பட்டதாகவும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கும் அதிகாரம் கட்சியின் மத்திய செயல் குழுவுக்கே உண்டு. இலங்கைக்கு வெளியே எமது கட்சியின் கிளைகளை அமைப்பதற்கான எந்த அனுமதியும் இதுவரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் வழங்கப்படவில்லை - என்றுள்ளது. (ஐ)

## தேர்தல்களை...

பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சர்களாக உள்ளனர். ஆனால், அவர்களில் பலர் பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப் பணிமனைக்கு வருவதில்லை.

பெரமுனவே அதிக ஆசனங்களை கொண்டுள்ளது. ஆனால், பலர் இன்று அமைச்சர்கள் இல்லை. வடக்கில் எமது கட்சிக்கு உறுப்பினர்கள் இல்லை - கிழக்கில் எமது கட்சிக்கு அமைச்சுகள் இல்லை. எமது கூட்டணியில் இருந்த கட்சிகளே இப்போது அரசாங்கத்தில் உள்ளன - என்று அவர் நேற்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டார். (ஐ)

## விசாரணை...

அமைச்சர் கெஹலிய மற்றும் அவரின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை இவர்கள் தொடர்பான வழக்கு கொழும்பு - மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போது அவர்களை பிணையில் விடுவிக்க கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், நீதிவான் அவர்களுக்கு பிணை அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

அத்துடன், வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

## மீனவர்கள்...

தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் செய்தியாளர் களை சந்தித்தபோது, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் நீண்டகாலமாக காணப்படும் பிரச்னையாகும். உண்மையில், இது எமது கடல் வளத்தை கொள்ளையடிக்கும் செயல்பாடாகும். சிலர் தமது அரசியலுக்காக இந்தப் பிரச்னையை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். இந்தப் பிரச்னைக்கு இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காண வேண்டும் என்பதற்காக அமைச்சு கடின முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தியாவைவிட கடுமையாக இலங்கையில் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் எம்மால் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளும் போதுமானவையல்ல என்பதை நாமும் தெளிவாக அறிவோம். எவ்வாறிருப்பினும் இது கடற்றொழில் அமைச்சருடைய பொறுப்பு மாத்திரமல்ல. வடக்கு மீனவ மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

அரசியல் பேதங்களை துறந்து வடக்கு அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடனான பேச்சுகளில் பங்குபற்றி தமது ஒத்துழைப்புக்களை வழங்கினால் இந்தப் பிரச்னைக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண முடியும். அதனை விடுத்து தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்னைகளை ஏற்படுத்திவிட்டு, அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வராமலிருப்பது ஒழுக்கமான செயல்பாடல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்லது கடற்றொழில் அமைச்சர் மாத்திரம் இந்தியாவுக்கு செல்லவில்லை. ஜே.வி.பி. உட்பட பலரும் இந்தியா செல்கின்றனர். அங்கு சென்று பால் உற்பத்தி நிலையங்களுக்கு செல்பவர்கள் மீனவர்களின் பிரச்னை குறித்து ஏன் பேசவில்லை? ஆனால், மீனவர்மீது போலியான அக்கறை கொண்டு முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டு உலகில் இடம்பெறும் சகல மீனவர் மாநாடுகளிலும் பங்கேற்கின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்- என்றும் மேலும் கூறினார். (ஐ)

# பெலியத்தை ஐவர் படுகொலை சந்தேகநபர்களுக்கு மறியல்!

கொழும்பு, மார்ச் 15

பெலியத்தையில் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 11 பேரும் தங்காலை நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

இதையடுத்து இவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஹேமந்த புஷ்பகுமார உத்தரவிட்டார்.

இந்தக் கொலை சம்பவம் கடந்த ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அம்பாந்தோட்டை - பெலியத்தையில் இடம்பெற்றது.

இதன்போது, பச்சை நிற கெப் வண்டியில் சென்ற குழு வெள்ளை நிற வாகனத்தில் பயணித்த ஐவரை சுட்டுப் படுகொலை செய்துவிட்டு தப்பிச்சென்றது.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் அபே ஜனபல கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாள்...

வீடுகளை இழந்த 24 குடும்பங்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் ஜீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஆயிரம் ரூபாய் கிடைப்பது சிரமம், அது கிடைத்தால் பல்வேறு பிரச்னைகள் சேர்ந்து வரும் எனவும் நாள்கூலி முறைமைக்கு பதிலாக நிரந்தர தீர்வொன்று அவசியம் எனவும் நாம் வலியுறுத்தினோம். அன்று நாம் பொய்யுரைத்தோம் எனக் கூறினர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

எது எப்படி இருந்தாலும் எதிர்வரும் 30 நாட்களுக்குள் ஆயிரத்து 700 ரூபாய் கிடைக்கும். ஆனால், நிரந்தரமான தீர்வு பொறிமுறையே எமது இலக்காக இருக்கின்றது.

மலையக மக்களுக்கு குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் எவ்வளவு பாடுபட்டிருப்பார் - காங்கிரஸின் தலைவர்கள் எவ்வாறு போராடி இருப்பார்கள். ஆனால், ரணசிங்க பிரமேதாஸவே அதனை வழங்கினார் என சிலர் கூறுகின்றனர். இந்தா பிரஜா உரிமை என அவர் சும்மா வழங்கினாரா? அரசியலில் போட்டி இருக்கலாம். ஆனால், சுயநல அரசியலுக்காக வரலாற்றை விற்க முற்படுவது கேவலம்.

மலையகத்தில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு சௌமியபூமி காணி உரிமை வழங்கும் திட்டம் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஜனன தினத்தன்று ஆரம்பமாகும். 200 வருட வலி இன்னும் இரு மாதங்களில் நீங்கும்.

இதுவரை உங்களின் (மலையக தமிழ் மக்கள்) தேசிய அடையாளம் இந்திய தமிழர். இனிமேல் உங்கள் தேசிய அடையாளம் மலையக தமிழர். சனத்தொகை கணக்கெடுப்பின்போது இதற்கான ஏற்பாடு இடம்பெறும். இதற்கு அரசியல்வாதிகள் காரணம் அல்லர். பொது மக்கள், சிவில் அமைப்புகள் அழுத்தம் கொடுத்துதான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்." என்றார். (ஐ)

## கடத்தல்...

குற்றஞ்சாட்டிய நிலையில் இந்தக் காணொலி அதற்கு வலுச்சேர்த்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு அண்மித்த நேரத்தில் காரைநகரிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தரும் அவரின் மனைவியும் பொன்னாலை பாலம் அருகே உள்ள கடற்படை முகாமுக்கு அருகில் குழு ஒன்றால் கடத்தப்பட்டனர்.

அவர்களை கடத்திச் சென்ற குழு இளைஞனின் மனைவியை சித்தங்கேணி சந்தியில் இறக்கிவிட்டுச் சென்றது. இதே நேரம், இளைஞரை கடத்திச் சென்றவர்கள் அவரை வெட்டிக் கொன்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனிடையே, தாம் உதவி கோரி கடற்படை முகாமுக்கு சென்றபோது அங்கிருந்த கடற்படையினர் தம்மை விரட்டினர் - கடத்தல்காரர்களுக்கு உதவினர் என்று கொல்லப்பட்டவரின் மனைவி கூறியிருந்தார்.

இந்த நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கடற்படை முகாமில் இருந்த சி. சி. ரீ. வி. கமெரா பதிவை பெற்று விசாரித்ததில் இந்த விடயம் வெளிவந்தது. (ஐ)

## யாழ்.வருகி...

ஏற்றுமதி அல்லது அங்கிருந்து இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கும் பிரிவை திறந்து வைக்கவே அவர் யாழ்ப்பாணம் வருகிறார்.

உணவுப் பண்டங்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவோ அல்லது இறக்குமதி செய்யவோ அனுமதி பெற இதுவரை வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் கொழும்புக்கு செல்ல வேண்டியிருந்தது. இதற்கான அலகு யாழ்ப்பாணத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ளது. இதனை எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதி திறந்து வைப்பார். (ஐ-அ)

## அகதி முகாமில்...

சேர்ந்த வழக்கறிஞர் ரவிகுமார் தாக்கல் செய்த மனுவில், 'தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்கள் அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும். இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்த 94 ஆயிரம் பேரில் 59 ஆயிரத்து 500 பேர் முகாம்களில் உள்ளனர்.

இந்த முகாம்களில் வளரும் குழந்தைகள் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகளை பெற இயலாததால், அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்கக் கோரி அளித்த மனு மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், 2022ஆம் ஆண்டு டிசெம்பர் 14ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சகம், முறையான பயண ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குடியுரிமை பெற உரிமையில்லை என உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவை ரத்து செய்து, தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், 'இந்த மனு பொதுப்படையாக உள்ளது. முகாமில் இருப்பவர்கள் குறித்த விவரங்கள் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முகாம்களில் பிறந்தவர்கள் குடியுரிமை கோரி விண்ணப்பித்தால், அதை குடியுரிமை சட்டத்துக்கு உட்பட்டு பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்' என்று உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

ஈழநாடு
Eelanadu

## வவுனியாவில் நெல் ஏற்றிச்சென்ற வாகனம் குடை சாய்ந்து விபத்து!

வவுனியா, மார்ச் 15

வவுனியா புளியங்குளம் பகுதியில் நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனம் குடைசாய்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து நெல் மூடைகளை ஏற்றிக் கொண்டு வவுனியா நோக்கி சென்ற ஹன்ரர் ரக வாகனம் புளியங்குளம் சந்திக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்தபோது வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்திற்குள்ளானது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார்.வாகனத்தின் முன்சக்கரம் வெடித்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கசிப்புடன் கைதான இளைஞருக்கு சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழில் கசிப்புடன் கைதான 19 வயது இளைஞனுக்கு 50 ஆயிரம் ரூபாய் தண்டமும் 09 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்புடன் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

நீதிமன்ற விசாரணைகளின்போது , இளைஞன் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டமும் 09 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் முன்னரும் கசிப்புடன் கைதாகி நீதிமன்றால் தண்டிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சீனி, பருப்பு, கோதுமை மா விலைகள் குறைந்துள்ளன!

கொழும்பு, மார்ச் 15

இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் மொத்த விலை 300 ரூபாயிலிருந்து 265 ரூபாவாகவும் ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 190 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும், பருப்பு கிலோ ஒன்றின் மொத்த விலை 350 ரூபாயிலிருந்து 285 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது தங்களிடம் போதியளவு வெள்ளைச் சீனி, கோதுமை மாவு மற்றும் பருப்பு கையிருப்பு உள்ளதாகவும், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை தடையின்றி வாங்க முடியும் என்றும் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். (அ)

## வட்டுக்கோட்டை விபத்து ஓட்டோ சாரதி காயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

வட்டுக்கோட்டை சந்தியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றைய தினம் காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணிகள் தனியார் போக்குவரத்து பேருந்து வட்டுக்கோட்டை சந்தியை கடக்க முற்பட்டது. இதன்போது அராலி தெற்கு பக்கத்தில் இருந்து வந்த, வெதுப்பக பொருட்கள் விற்பனை செய்யும் முச்சக்கர வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகேயுள்ள வெற்றுக் காணியினுள் இருந்த கற்களின் மேல் பாய்ந்தது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதி தலையில் காயமடைந்தார். (ஐ)

வெடுக்குநாறி பிரச்னைக்கு தீர்வு வரும்வரை

# பாராளுமன்ற அமர்வை புறக்கணிக்கவேண்டும்!

### தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை

வவுனியா, மார்ச் 15

**வவுனியா-வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து உதவுமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம், ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில், தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

எத்தனையோ கண்டன அறிக்கைகள் வெளியிட்டும், கவனயீர்ப்புக்கள் நடைபெற்ற போதும் வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விவகாரத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை என அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அரசாங்கத்திற்குப் பாரிய அழுத்தத்தை பிரயோகிக்கவும், சர்வதேச கவனத்தை ஈர்த்து இந்தப் பிரச்னைக்கு தீர்வைப் பெறவும், உரிய தீர்வு கிடைக்கும் வரை பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து உதவுமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில், தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# வெடுக்குநாறிமலை கைதை எதிர்த்து இன்று போராட்டம்

### நெடுங்கேணி சந்தியில் நடத்த ஏற்பாடு

முல்லைத்தீவு, மார்ச் 15

வெடுக்குநாறிமலை ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரை விடுவிக்கக் கோரி இன்று வெள்ளிக்கிழமை நெடுங்கேணிச் சந்தியில் போராட்டம் ஒன்றை நடத்த வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்-

08.03.2024 அன்று எமது ஆலய வளாகத்தில், சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த எமது ஆலயத்தின் பரிபாலன சபையின் நிர்வாகிகள் மீதும், சிவ பக்தர்கள் மீதும் பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள சிவபக்தர்களை விடுவிக்கக் கோரியும் பாரியளவிலான வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம். இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நெடுங்கேணி சந்தியில் ஆரம்பிக்கும் இந்தப் போராட்டமானது, வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று, இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான மகஜர் கையளிக்கப்படும்.

அரச அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்களையும், சமயம் சார்ந்த அமைப்புக்களையும், தமிழ் அரசியல்வாதிகளையும், தமிழ் உணர்வாளர்களையும், சிவில் சமூகத்தினரையும், பல்கலைக்கழக மாணவர்களையும், ஊடகங்களையும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# கிரிக்கெட் வீரர் திரிமன்ன கார் விபத்தில் சிக்கி காயம்!

கொழும்பு, மார்ச் 15


இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லஹிரு திரிமன்னே பயணித்த கார் விபத்துக்கு உள்ளானதில் அவர் படுகாயமடைந்தார். அவருடன், மேலும் மூவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - திரப்பனை பகுதியில் நேற்று காலை 07.45 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அநுராதபுரம் நோக்கி பயணித்த காரும் எதிர்த்திசையில் வந்த லொறியும் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், காரில் பயணித்த லஹிரு திரிமன்னே மற்றும் இருவரும் லொறியின் சாரதியும் காயம டைந்து அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)



# இளைஞர்மீது தாக்குதல்; ஐவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 15

வீதியில் சென்ற இளைஞனை வழிமறித்து தாக்கிய குற்றச்சாட்டில் கைதான 5 இளைஞர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு , யாழ். நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீதியில் சென்ற தன்னை சிலர் வழிமறித்துத் தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , ஐந்து இளைஞர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை , ஐவரையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



முதல் ஒருநாள் போட்டி:

# இலங்கை அணியை வீழ்த்தியது வங்கம்!

சட்டோகிராம், மார்ச் 15

முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணியை 6 விக்கெட்களால் வீழ்த்தியது பங்களாதேஷ் அணி.

பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் சட்டோகிராமில் நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.5 ஓவரில் 255 ஓட்டங்கள் எடுத்து ஆல்அவுட் ஆனது. ஜனித் லியனகே அதிகபட்சமாக 66 பந்தில் 67 ஓட்டங்கள் சேர்த்தார்.

விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான குசல் மெண்டிஸ் 75 பந்துகளில் 59 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் அணி சார்பில் ஷொரிபுல் இஸ்லாம், தஸ்கின் அகமது, தன்ஜிம் ஹசன் ஷகிப் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

256 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர் லிட்டன் தாஸ் ஓட்டம் எடுக்காமல் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரர் சௌமிய சர்கார் 3 ஓட்டங்களில் வெளியேறினார். ஆனால், அணித் தலைவர் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

தவ்ஹித் ஹ்ரிடோய் (3), மெஹ்முதுல்லா (37) ஆட்டமிழந்த நிலையில் ஷான்டோ உடன் முஷ்பிகுர் ரஹீம் இணைந்தனர். இந்த இணை அபாரமாக விளையாடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது.

ஷான்டோ 122 ஓட்டங்கள் எடுத்தும், ரஹீம் 73 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருக்க பங்களாதேஷ் அணி 44.4 ஓவரில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 257 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என பங்களாதேஷ் அணி முன்னிலைப் பெற்றுள்ளது. (ஐ)

# பெண்கள் பிறீமியர் லீக் டில்லி இறுதிப் போட்டியில்!



புதுடில்லி, மார்ச் 15

பெண்கள் பிறீமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு நேரடியாக முன்னேறியது.

பெண்கள் பிறீமியர் லீக் கடைசி லீக் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. டில்லியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் குஜராத் ஜெயன்ட்ஸ்- டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் ஜெயன்ட்ஸ் அணி டெல்லி கப்பிட்டல்ஸ் வீராங்கனைகளின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 126 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது.

முதல் மூன்று வீராங்கனைகளான வோல்வார்த் (7), மூனி (0), ஹேமலதா (4) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

6ஆவது இடத்தில் களம் இறங்கிய பாரதி புல்மாலி 36 பந்துகளில் 42 ஓட்டங்கள் அடித்தார்.

டில்லி கப்பிட்டல்ஸ் அணி சார்பில் மரிஜான்னே காப், ஷிகா பாண்டே, மினு மானி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

பின்னர் 127 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் டில்லி கப்பிட்டல்ஸ் அணி வீராங்கனைகள் களமிறங்கினர். அந்த அணியின் தொடக்க வீராங்கனை மெக் லேனிங் 18 பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அலிஸ் கேப்சி ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேறினார்.

ஆனால், மற்றொரு தொடக்க வீராங்கனையாக ஷபாலி வர்மா அபாரமாக விளையாடி 37 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸருடன் 71 ஓட்டங்கள் விளாசினார். ஜெமிமா ரொட்ரிக்ஸ் 28 பந்துகளில் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்க டில்லி கப்பிட்டல்ஸ் 13.1 ஓவரில் இலக்கை எட்டி ஏழு விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

லீக் போட்டிகள் முடிவில் டில்லி கப்பிட்டல்ஸ் 8 போட்டிகளில் 6இல் வெற்றி பெற்று புள்ளிகள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

இதன்மூலம், டில்லி கப்பிட்டல்ஸ் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (ஐ)



# சபலெங்கா தோல்வி!

கலிபோர்னியா, மார்ச் 15

இந்தியன்வெல்ஸ் ஓப்பனில் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா அதிர்ச்சி தோல்விடைந்தார்.

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தியன்வெல்ஸ் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடக்கிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்றில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, அமெரிக்காவின் எம்மா நவாரோவுடன் மோதினார்.

இதில் சபலென்கா 3-6, 6-3, 2-6 என்ற செற் கணக்கில் எம்மாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். (ஐ)

# பாகிஸ்தானுக்கு செல்கின்றது நியூசிலாந்து கிரிக்கெட் அணி!



கராச்சி, மார்ச் 15

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது.

இதன்படி இந்த இரு அணிகளுக்கு இடையிலான முதல் 3 போட்டிகள் முறையே ஏப்ரல் 18, 20, 21ஆம் திகதிகளில் ராவல்பிண்டியிலும் 4ஆவது, 5ஆவது போட்டிகள் முறையே 25, 27ஆம் திகதிகளில் லாகூரிலும் நடைபெறவுள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு முன்பாக நடக்கும் நியூசிலாந்தின் கடைசி 20 ஓவர் தொடர் என்பதால் இது அந்த அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (ஐ)



# இகா காலிறுதிக்கு முன்னேறினார்!

கலிபோர்னியா, மார்ச் 15

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் போட்டியில் இகா ஸ்வியாரெக் காலிறுக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் போலந்து நாட்டின் இகா ஸ்வியாரெக், கஜகஸ்தானின் யூலியா புதின்சேவாவுடன் மோதினார்.

இதில் ஸ்வியாரெக் 6-1, 6-2 என்ற நேர் செற்களில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# சீனாவின் வடக்கு எல்லை வரை சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை இந்தியா இப்போது பரிசோதித்தது ஏன்?

ஒரே சமயத்தில் பல குண்டுகளைச் சுமந்து சென்று பல இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் திறன் கொண்ட அக்னி-5 ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்திருப்பதாக இந்தியா அறிவித்தது.

இது கடந்த திங்கள் கிழமை (மார்ச் 11-ஆம் தேதி) அன்று நிகழ்த்தப்பட்டது என்று அறிவிக்கப்பட்டிருகிறது.

இதற்கு 'மிஷன் திவ்யாஸ்திரம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஒடிஷாவில் அமைந்துள்ள டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் தீவு என்றழைக்கப்படும் சிறிய தீவில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

அக்னி-5 'எம்.ஐ.ஆர்.வி' எனப்படும் 'மல்டிபிள் இன்டிபென்டெண்ட்லி டார்கெட்டபிள் ரீ-என்ட்ரி' தொழில்நுட்பத்துடன் கூடியது. இது பல இலக்குகளைத் தாக்குவதற்கான ஆயுதங்களை தாங்கிச்செல்லும் ஒரே ஏவுகணையைக் குறிக்கும்.

உலகில் ஒரு சில நாடுகளே இந்தத் தொழில்நுட்பத்தை வைத்திருக்கின்றன.



இது இந்தியாவுக்கு ஒரு பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

இந்த தொழில்நுட்பத்தின் உதவியோடு, ஒரு நாடு நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் உள்ள பல இலக்குகளை ஒரே ஏவுகணை மூலம் குறிவைத்துத் தாக்க முடியும்.

அக்னி-5 சோதனை வெற்றியடைந்தது குறித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, தனது சமூக வலைதளங்களப் பக்கங்களில் இதில் பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

"எம்ஐஆர்வி தொழில்நுட்பம் பொருத்தப்பட்ட, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அக்னி-5-ஐ 'மிஷன் திவ்யாஸ்திரத்தில்' வெற்றிகரமாக சோதனை செய்ததில் டிஆர்டிஓ விஞ்ஞானிகள் பெருமிதம் கொள்கிறார்கள்," என்று பிரதமர் மோடி தெரிவித்திருக்கிறார்.

## எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பம் என்றால் என்ன?

அக்னி-5 ஏவுகணை 5,000 கிலோமீட்டர்கள் தூரம் வரை சென்று இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.

இந்தியாவின் நீண்ட கால பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டால் அக்னி-5 நாட்டுக்கு மிக முக்கியமானது என்று பிரிஐ செய்தி முகமை தெரிவித்துள்ளது.

அக்னி-5 கிட்டத்தட்ட முழு ஆசியாவையும், சீனாவின் முனையில் இருக்கும் வடக்குப் பகுதிகளையும், ஐரோப்பாவின் சில பகுதிகளையும் சென்று தாக்கும் அளவுக்குத் திறன்வாய்ந்தது.

முன்னதாக அக்னி-1 முதல் அக்னி-4 வரையிலான ஏவுகணைகள் 700கி.மீ முதல் 3,500கி.மீ தூரம் மட்டுமே சென்று தாக்கும் திறன் கொண்டிருந்தன.

தனது இலக்கை ஒரு சிறிய தவறும் இல்லாமல் சென்று தாக்கும் வகையில் அக்னி-5இல் சென்சார்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று இந்தியா கூறுகிறது.

இந்தியாவில் 1990 முதல் அக்னி ஏவுகணைகள் உள்ளன. அப்போதிருந்து அதன் நவீன வடிவங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அக்னி-5 ஏவுகணையில் உள்ள எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பம் 50 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது, ஆனால் இப்போது வரை அது சில நாடுகளில் மட்டுமே உள்ளது, என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் தெரிவித்திருக்கிறது.

அக்னி-5 அணு ஆயுதங்களையும் தாங்கிச் செல்லும் திறன்கொண்டது.

இதுவரை எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பம் கொண்ட ஏவுகணைகள் ரஷ்யா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளிடம் இருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் அறிக்கை கூறுகிறது. இந்த ஏவுகணைகளை நிலத்தில் அல்லது கடலில் நிறுத்தப்பட்டுள்ள நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவ முடியும்.

இதே வகையான ஏவுகணை அமைப்பை உருவாக்க பாகிஸ்தான் முயற்சித்து வருகிறது. இஸ்ரேலிடம் இந்த ஏவுகணை அமைப்பு உள்ளது, அல்லது அதை உருவாக்க முயற்சித்து வருகிறது என்று உறுதிப்படுத்தப்படாத தக



வல்கள் உள்ளன.

ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் பரவல் தடுப்பு மையத்தின் கூற்றுப்படி, எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பத்தை உருவாக்குவது மிகவும் கடினம். அதனால்தான் சில நாடுகளிடம் மட்டுமே இது உள்ளது. இதை உருவாக்க, பெரிய ஏவுகணைகள், சிறிய குண்டுகள், சரியான வழிகாட்டுதல், மற்றும் பறக்கும் போதே குண்டுகளை விடுவிக்கும் திறன் ஆகியவை தேவை.

1970- ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா இந்தத் தொழில்நுட்பத்தை வைத்திருந்தது. அதன்பிறகு சோவியத் யூனியனும் இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கியது. இந்தப் படியலில் இந்தியா புதிதாக இணைந்துள்ளது.

## இந்தியாவிடம் இருக்கும் அக்னி ஏவுகணைகளின் திறன் என்ன?

கடந்த 2012-ஆம் ஆண்டு முதல் அக்னி ஏவுகணைகள் பலமுறை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டிருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் கூறுகிறது.

700கி.மீ. தூரம் வரை செல்லக்கூடிய அக்னி-1 ஏவுகணையிலிருந்து, 5,000கி.மீ. வரை செல்லக்கூடிய அக்னி-5 வரை இது முன்னேறியிருக்கிறது.

கடந்த 2021-ஆம் ஆண்டு ஜூன் மாதம், டிஆர்டிஓ அக்னி-பி (ப்ரைம்) ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்தது. இது 1,000கி.மீ. முதல் 2,000கி.மீ. வரையிலான தூரம் செல்லக்கூடியது. இதனை சாலையிலிருந்தோ, ரயில் தளத்தில் இருந்தோ ஏவ முடியும்.

2007-ஆம் ஆண்டு அக்னி-5-ஐ உருவாக்குவதாக இந்தியா அறிவித்திருந்தது.

அக்னி-5-இன் முதல் வெற்றிகரமான சோதனை 2012-ஆம் ஆண்டு செய்யப்பட்டது. அப்போது டிஆர்டிஓ டைரக்டர் ஜெனரல் வி.கே.சரஸ்வத், இந்தியா எம்ஐஆர்வி தொழில்நுட்பத்தில் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.



அக்னி-5 திட்டத்தின் வெற்றியில் பெண்கள் முக்கிய பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது.

இதுவரை இந்திய பாதுகாப்புப் படைகளிடம் இருக்கும் அக்னி-1 700கி.மீ. தூரம் செல்லக்கூடியது, அக்னி-2 2,000கி.மீ. செல்லக்கூடியது, அக்னி-3 2,500 கி.மீ. தூரம் செல்லக்கூடியது, அக்னி-4 3,500 கி.மீ. செல்லக்கூடியது.

அக்னி-5 நீண்ட தூரம் செல்லக்கூடியதாலும், அணு சக்தி திறன் கொண்டிருப்பதாலும், சீனாவை மனதில் வைத்தே இந்தியா இந்த ஏவுகணையை வடிவமைக்கத் துள்ளதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

அதே நேரத்தில், பாகிஸ்தான் போன்ற நெருங்கிய இலக்குகளுக்கு பழைய அக்னி ஏவுகணைகள் போதுமானது என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

## இந்தியாவின் நோக்கம் என்ன?


அக்னி-5 மூலம் சீனாவின் விடுக்கும் ராணுவ, பாதுகாப்புச் சவால்களை முறியடிக்க முடியும் என இந்தியா நம்புகிறது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் அறிக்கையின்படி, ஆராய்ச்சியாளர்கள் ஜோசுவா டி வைட் மற்றும் கைல் டெமிங் ஆகியோர், இந்தியாவின் எம்.ஐ.ஆர்.வி திட்டம் சீனாவுடனான பிராந்திய போட்டியின் வெளிப்பாடு என்று கருதுகின்றனர்.

இதிலிருந்து இந்தியா மூன்று நன்மைகளைப் பெற முடியும் என்றனர்:

சீனாவின் நகரங்களைக் குறிவைக்கக்கூடிய ஏவுகணைகள் இந்தியாவிடம் குறைவாகவே இருப்பதாக நம்பப்படுவதால், நிலத்திலிருந்து ஏவப்படக்கூடிய ஏவுகணைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது.

கடலில் இருந்து இயக்கப்படக்கூடிய, அணு ஆயுதங்களைத் தடுக்கக் கூடிய தொழில்நுட்பத்தில் இந்தியா



பின்தங்கி விடாமல் இருப்பது. அணுசக்தியால் இயங்கும் ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல்களில் இந்தியாவைவிட சீனா மிகவும் முன்னேறியுள்ளது.

சீனா பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை அதாவது பி.எம்.டி-யை உபயோகிக்க நினைத்தால், அதற்கு அக்னி-5 மூலம் பதிலடி கொடுக்க முடியும் என்று இந்தியா கருதுகிறது.

இந்தியா 1998-இல் பொக்ரான்-2 சோதனையைச் செய்தது. அணு ஆயுதங்களைப் பொறுத்தவரை, முதலில் அதனை தாம் பயன்படுத்தப்படுவதில்லை, அதாவது முதலில் பயன்படுத்துவதில்லை என்ற கொள்கையை கடைப்பிடிப்பதாகக் கூறுகிறது.

## சீனாவுக்கு சவால் விட முடியுமா?

'தி ஹிந்து' நாளிதழிடம் பேசிய அல்பானி பல்கலைக் கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் இணைப் பேராசிரியர் கிறிஸ்டோபர் கிளியரி, "சீனாவுக்கு எதிராக இந்தியா தனது ராணுவத் திறன்களை வெளிப்படுத்தப் போராடி வருகிறது. சீனாவின் பல ராணுவத் தளங்கள் இந்தியாவின் எல்லைக்கு அப்பாற்பட்டவை. அக்னி-5 இந்த இலக்குகளை எட்டுவதற்கு உதவுகிறது.," என்றார்.

அக்னி-5 சோதனை நடத்துவதற்காக வங்காள விரிகுடாவின் மீது விமானங்கள் பறக்கக்கூடாது என்று இந்தியா அறிவித்தபோது, சீனா அதைக் கண்காணித்ததாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் அறிக்கை கூறுகிறது.

அந்தச் செய்தித்தாளிடம் பேசிய மூலோபாய விஷயங்களில் நிபுணரான ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் டி.எஸ்.துத்தா, 'நாங்கள் அடிக்கடி டிஆர்டிஓவை விமர்சிக்கிறோம். ஆனால் ஏவுகணைத் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை அந்நிறுவனம் பல வெற்றிகரமான திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. சீனாவும் தனது அணு ஆயுதங்களை நவீனமயமாக்கி வருவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியா பின்தங்க முடியாது," என்று கூறியிருக்கிறார்.

சர்வதேச அரசியல் விவகாரங்களில் நிபுணரான பிரம்மா செல்லானி, தனது சமூக ஊடகப் பக்கத்தில், "அக்னி -5 ஏவுகணை, எதிரியின் தாக்குதலுக்கு எதிராக இந்தியா தனது அணுசக்தித் திறனை வெளிப்படுத்த உதவும் பாதுகாக்க உதவும். எதிரியின் ஏவுகணை அமைப்பை மறுபக்கத்தில் இருந்து முறியடிக்க இது உதவும். இந்தப் புதிய திறனை நிலைநிறுத்துவதற்கு முன் இந்தியா மேலும் பல சோதனைகளை நடத்த வேண்டும்," என்று எழுதியிருக்கிறார்.

தெற்காசிய ராஜதந்திர விவகாரங்களைப் பிந்தொடர்ந்து வரும் டெரெக் ஜே கிராஸ்மேன், தனது சமூக ஊடகப் பக்கத்தில், 'எம்.ஐ.ஆர்.வி தொழில்நுட்பம் பொருத்தப்பட்ட அக்னி-5 ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்ததற்காக இந்தியாவுக்கு வாழ்த்துக்கள். ஆனால் இப்போது ஏன்? எம்.ஐ.ஆர்.வி அணுசக்தி நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைய விரும்புகிறது. மேலும் தேர்தல்கள் நெருங்கிவிட்டன," என்று பதிவிட்டிருக்கிறார்.

# சகல சமூகங்களையும் அரவணைப்பதற்கு புதிய அரசியல் பங்காளித்துவம் அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

வடபகுதியில் போரின் முன்னரங்க நிலையாக ஒரு காலத்தில் விளங்கிய வவுனியா நகரம் இப்போது அமைதியாகவும் பரபரப்பாகவும் இயங்குகின்ற ஒரு நகர மையமாகும். அதன் பௌதீக உட்கட்டமைப்புகள் நன்றாக இல்லை. பழுதடைந்த கட்டிடங்களும் நாற்றமெடுக்கும் வடிகால்களும் எங்கும் காணப்படுகின்றன. பொலன்னறுவை மற்றும் அம்பாந்தோட்டை போன்று அபிவிருத்தி செய்யப்படுவதற்கு வவுனியாவுக்கு அரசாங்க அதிகாரத்தின் அனுசரணை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், நகரம் அமைதியாக இருக்கிறது.

ஒரு காலத்தில் குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தலின் கீழ் இருந்த நகரம் என்றோ போர்க்களத்தின் முன்னரங்க நிலைகளுக்கும் தென்பகுதியில் தங்களது வீடுகளுக்கும் படையினர் ஏற்றிச்செல்லப்பட்ட ஒரு இடைத்தரிப்பு நிலையாக விளங்கிய நகரம் என்றோ இப்போது கற்பனை செய்துபார்ப்பது கஷ்டமாக இருக்கிறது. கடந்த காலத்தில் பல சோதனைச் சாவடிகளில் பஸ்கள் சோதனை செய்யப்பட்டபோது மக்கள் அவற்றில் இருந்து இறங்கி நீண்டதூரம் நடந்துசென்ற காட்சி வழமையானதாக இருந்தது.

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence -AI) நிலைபேறான சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என்ற தொனிப்பொருளில் கடந்த வாரம் வவுனியா பல்கலைக்கழகம் சர்வதேச சமாதான மகாநாடொன்றை நடத்தியது. இது ஒரு புதிய தொனிப்பொருள். உள்ளூர்ப் பங்கேற்பாளர்களில் பலர் முதற்தடவையாக அது பற்றி அறிபவர்களாக இருந்தார்கள்.

அரசாங்க பல்கலைக்கழகங்களில் வவுனியா பல்கலைக்கழகம் மிகவும் புதியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக இருந்து பிறகு விஸ்தரிக்கப்பட்டு 2021 ஆண்டு முதல் முழுமையான ஒரு பல்கலைக்கழகமாக அது இயங்கிவருகிறது.

பரந்த நிலப்பரப்பில் நிறுவப்பட்டிருக்கும் பல்கலைக்கழகத்தின் கட்டிடங்கள் புதியவை. எங்கு பார்த்தாலும் பசுமையான ஓங்கிவளர்ந்த மரங்கள்.

இடையூறின்றி கல்விகற்பதற்கும் சிந்திப்பதற்கும் வசதியான சூழல். வெளிநாடுகளில் இருந்துவந்து மகாநாட்டில பங்கேற்றவர்களுக்கு குறிப்பாக அயல்நாடான இந்தியாவில் இருந்து வந்தவர்களுக்கு வவுனியாவினதும் அதன் பல்கலைக் கழகத்தினதும் அமைதி ஆச்சரியத்தை தந்தது. கட்டுநாயக்கவில் இருந்து வவுனியாவுக்கான பயணமும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

செயற்கை நுண்ணறிவு பற்றிய ஒரு மகாநாடு கலாசார மற்றும் மனஎழுச்சி அம்சங்கள் எதுவும் இல்லாத மூளைக்கு வேலைகொடுக்கிற மிகவும் அறிவுஜீவித்துவ அனுபவமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவுபூர்மான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களுக்கு மேலதிகமாக செழுமையான கலாசார அனுபவத்தைத் தரக்கூடியதாகவும் மகாநாடு அமைவதை ஏற்பாட்டாளர்கள் உறுதிசெய்தார்கள்.

ஏற்பாட்டாளர்கள், வவுனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள் மற்றும் உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்தவர்கள் மகாநாட்டின் தொடக்க நிகழ்வில் நிகழ்த்திய உரைகளுக்கு இடையில் கலாசார நிகழ்வும் மேடையேற்றப்பட்டன. ஆரம்ப நடனம் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் நடனங்களின் ஒரு கலவையாக அமைந்தது. அது அந்தப் பிராந்தியத்தின் பன்முகத்தன்மையும் சகல சமூகங்களையும அரவணைக்கும் உணர்வும் அங்கீகரிக்கப்படுவதன் வெளிப்பாடாக அமைந்தது.

## நேர்மறையான ஈடுபாடு

விளிம்புநிலையில் உள்ள சமூகங்களையும் உள்ளடக்குவதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்தும் மகாநாட்டில் இடம்பெற்ற கலாசார நிகழ்ச்சிகளில் பெரிதும் வரவேற்கக்கூடிய அம்சமாக இருந்தது. விளிம்புநிலைச் சமூகங்கள் அவற்றின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் பேணிக்காக்கின்ற அதேவேளை, நவீன சமூகத்தின் தேவைகளுக்கு தங்களை இசைவாக்கிக் கொள்வதற்கு வசதியாக அவர்களை பிரதானபோக்கு சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள கல்விச் சமூகத்தினரில் சிலர் முயற்சிக்கிறார்கள்.

மகாநாட்டில் இடம்பெற்ற கலாசார நிகழ்ச்சியில் இடம்பெற்ற நடனங்களில் வேடுவ சமூகத்தின் நடனம், கிழக்கு கரையோர (மட்டக்களப்பு ) பறங்கியரின் நடனமும் போரின் கொடுமையை பெருமளவுக்கு அனுபவித்த வன்னிப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களின் நடனங்களும் அடங்கியிருந்தன.




ஐக்கியம் மற்றும் சகல சமூகங்களையும் அரவணைக்கும் உணர்வின் இத்தகைய ஒரு வெளிப்பாடு வவுனியாவில் சாத்தியமாகமுடியும் என்று மகாநாட்டுக்கு வந்த சர்வதேச பிரதிநிதிகள் கடந்த நான்கு, ஐந்து தசாப்த காலத்தில் கற்பனை செய்தே பார்த்திருக்க மாட்டார்கள்.

கடந்த தசாப்தங்களில் போரின் இனத்துவத் தன்மை காரணமாக ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் மற்றைய சமூகத்தைச் சேர்ந்தவரை ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலாக, தகவல் கொடுப்பவராக, குண்டைக் கொண்டுதிரிபவராக அல்லது வன்முறையைத் தூண்டிவிடுபவராகவே நோக்கினார்கள்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தமையும் இரு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் பொதுமக்களின் சிந்தனையில் பாரிய மாற்றத்துக்கு பங்களிப்பைச் செய்தன. அது வவுனியா பல்கலைக்கழக மகாநாட்டில் பிரதிபலித்தது. சமூகங்களுக்கு இடையிலான சந்தேகமும் பகைமையும் இன்று மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றன.

போரின் முடிவு பாதைளைத் திறந்து விட்டது. சகலரும் நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்றுவரக்கூடியதாக இருக்கிறது. ஊடாட்டங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மத்தியில் இயற்கையாக நல்லெண்ணம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது.

பொருளாதார வீழ்ச்சியும் அதன் விளைவாக எல்லோரும் பொதுவாக அனுபவிக்க வேண்டியிருந்த இடர்பாடுகளும் ஒரு சில மாதகால இடைவெளியில் சமூகங்களுக்கு இடையிலான தொலைவைக் குறைத்துவிட்டன. தங்களது வாழ்வின் பிரதான பிரச்னை இன ரீதியானதல்ல, பொருளாதார ரீதியானது என்று அவர்கள் உணரத் தொடங்கினார்கள். மற்றைய சமூகம் அல்ல அதிகார நிலைகளில் இருந்துகொண்டு நியாயமில்லாத முறையில் பயனடைகின்றவர்களே தங்களது பிரச்சினைகளுக்கு காரணம் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்கிறார்கள்.

## பங்காளித்துவ மாற்றம்

புறக்கணிக்கப்பட்டு பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படும் விளிம்புநிலை மக்களுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கான உறுதிப்பாடு தேசத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறைக்கு அவசியமான சகல சமூகங்களையும் அரவணைக்கும் நடைமுறை மீதான நாட்டத்தின் அறிகுறியாகும். வவுனியா பல்கலைக்கழகத்தில் வெளிக்காட்டப்பட்ட சகலரையும் அரவணைக்கும் பண்பு பிரதான போக்கு சமூகத்தில் நிச்சயமாக இருக்கவேண்டியதாகும். ஆனால் அது அவ்வாறு இல்லை.

அரசியலமைப்பில் பிரத்தியேகமான ஏற்பாடு இருக்கின்றபோதிலும் கூட தேசிய கீதத்தை சிங்களத்திலும் தமிழிலும் இசைப்பது ஒரு அரசியல் பிரச்னையாக இருக்கின்ற ஒரு நாடாக இலங்கை விளங்குகிறது. தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, கனடா மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளில் பல மொழிகளில் தேசிய கீதங்கள் இசைக்கப்படுகின்றன. தேசிய கீதத்தின் வெவ்வேறு பிரிவுகள் வெவ்வேறு மொழிகளில் இசைக்கப்படுகின்றன.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்தபோது தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கு பிறகு 1949 ஆம் ஆண்டு தேசியதின வைபவத்தில் மாத்திரம் மீண்டும் அது தமிழில் இசைக்கப்பட்டது. இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவதை 2016 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அரசாங்கம் உறுதிசெய்யும் வரை அது சிங்களத்தில் மாத்திரமே இசைக்கப்பட்டுவந்தது.

அதற்கு பெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் அரசாங்கம் மாறியதும் தமிழிலும் தேசிய கீதத்தை இசைக்கும் இந்த ஏற்பாடு நிறுத்தப்பட்டது. ஜனாதிபதியாக விக்கிரமசிங்க வந்த பின்னர் மாத்திரமே அது மாற்றியமைக்கப்பட்டது.

தேசிய நல்லிணக்கம், இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பரவலாக்கத்தின் தேவை இலட்சியங்களை ஆதரித்துப் பகிரங்கமாகப் பேசுவதற்கு தயாராயிருக்கும் சொற்ப எண்ணிக்கையான தேசிய அரசியல் தலைவர்களில் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஒருவர்.

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் கண்டு இனநெருக்கடிக்கு முடிவைக் காண்பது குறித்து அவர் உறுதியளித்து வருகின்றார். ஆனால், ஆனால் இனநெருக்கடித் தீர்வுடன் சம்பந்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை பொறுத்தவரை, முன்னேற்றத்தை காண முடியவில்லை.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்கு வசதியாக கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அண்மையில் கூறினார். இந்த மறுசீரமைப்பை பயனுறுதியுடைய முறையில் முன்னெடுப்பதற்கு மேலும் 62 சட்டங்களை நிறைவேற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மிகவும் அண்மையில் பெண்களுக்கு சமவுரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய இரு புதிய சட்டமூலங்களைக் கொண்டு வருவதில் ஜனாதிபதி முன்னின்று செயற்பட்டார். இன நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கு புதிய சட்டங்களை அரசாங்கத்தினால் நிறைவேற்ற இயலாமல் இருப்பதற்கு காரணம் பாராளுமன்ற பெரும்பான்மையிடம் இருந்து அதற்கு ஆதரவு கிடைக்காதமையேயாகும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆளும் கட்சியின் தலைவர்களுடன் ஜனாதிபதி விக்கிரமசிங்க நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறவில்லை என்று வெளியான அண்மைய செய்திகள் சமூகங்களை புறக்கணிப்பதை விடுத்து அரவணைக்கும் பண்பின் அடிப்படையில் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கு புதிய அரசியல் பங்காளித்துவம் (New political partnership) ஒன்று அவசியம் என்பதன் ஒரு அறிகுறியாகும்.

# முருகன், றொபேட் பயஸ், ஜெயக்குமார்: இலங்கை பாஸ்போர்ட் கிடைத்ததும் எங்கே செல்கின்றனர்?

**முரளிதரன் காசிவிஸ்வநாதன்**

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கு இலங்கை அரசின் கடவுச் சீட்டை பெறுவதற்கான முயற்சிகள் துவங்கியுள்ளன. அவர்கள் எங்கே செல்லவிருக்கிறார்கள்?

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 30 ஆண்டுகளாக சிறையில் இருந்த பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரும் 2022ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.


கடந்த ஆண்டு மே மாதத்தில் பேரறிவாளனும் நவம்பர் மாதத்தில் நளினி, முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரும் விடுதலை செய்யப்பட்டனர். இதில் பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் ஆகிய மூவரும் இந்தியர்கள். ஸ்ரீஹரன் என்ற முருகன் (நளினியின் கணவர்), சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் சாந்தன் இலங்கை பாஸ்போர்ட் மூலமாகவே இந்தியா வந்தவர். முருகனிடமும் இலங்கையின் பாஸ்போர்ட் இருந்தது. ராபர்ட் பயஸும் ஜெயக்குமாரும் 1990 செப்டம்பரில் தமிழகத்திற்கு வந்தவுடன் அகதிகளாகப் பதிவுசெய்து கொண்டவர்கள். ராபர்ட் பயஸின் மைத்துனர்தான் ஜெயக்குமார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை அடுத்து சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் ஆகிய மூவரும் இந்தியர்கள் என்பதால் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். ஆனால், இலங்கை குடிமக்களான முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய நான்கு பேரும் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

முகாமில் இருந்து விடுவித்து தாங்கள் விரும்பும் நாட்டிற்குத் தங்களை அனுப்பி வைக்க வேண்டுமென தொடர்ந்து இவர்கள் கோரி வந்தனர். ஆனால், இவர்களிடம் செல்லத்தக்க பாஸ்போர்ட்கள் இல்லாத காரணத்தால், தொடர்ந்து திருச்சி சிறப்பு முகாமிலேயே வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் இருந்த சாந்தனுக்கு உடல்நலம் குன்றியது. அவர் மருத்துவமனையில்



சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கான பயண ஆவணங்கள் வழங்கப்பட்டன. இருந்தபோதும், அவர் மருத்துவமனையிலேயே காலமானார். அவரது உடல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து மீதமுள்ள மூவருக்கும் பயண ஆவணங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது. இந்நிலையில்தான், சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

அதில், லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால் தனக்கும் தன் கணவருக்கும் விசாவுக்காக விண்ணப்பித்து இருந்ததாகவும் நேர்காணலுக்காக ஜனவரி 30ஆம் தேதி அழைக்கப்பட்ட நிலையில், தான் மட்டும் நேர்காணலில் கலந்துகொண்டதாகவும் தெரிவித்திருந்தார். முருகன் சிறப்பு முகாமில் இருந்ததால் நேர்காணலில் கலந்துகொள்ள முடியவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

திருச்சி சிறப்பு முகாமில் உள்ள மோசமான சூழிலின் காரணமாக கடந்த ஒரு மாதத்தில் இரண்டு பேர் இறந்துவிட்ட நிலையில், தனது கணவருக்கு எதுவும் நடப்பதற்கு முன்பாக அவருக்கு பாஸ்போர்ட் வழங்க வேண்டும் எனவும் நளினி கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், குமரேஷ் பாபு ஆகியோர் அடங்கிய அமர்வில் மார்ச் 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த மூவரின் நேர்காணலுக்காக புதன்கிழமையன்று சென்னைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இன்று காலையில் திருச்சி சிறப்பு முகாமில் இருந்த முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகிய மூவரும் காவல்துறையின் பலத்த பாதுகாப்புடன் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். நண்பகல் 12 மணியளவில் அவர்கள் தூதரகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களைக் காண்பதற்கு, நளினி, ஜெயக்குமாரின் குடும்பத்தினர், அவர்களது வழக்கறிஞர்கள் ஆகியோர் வந்திருந்தனர். சுமார் 2 மணியளவில் விண்ணப்பிப்பதற்கான பணிகள் முடிந்து அவர்கள் மீண்டும் திருச்சி சிறப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### இவர்கள் எங்கே செல்லவிருக்கின்றனர்?

நளினிக்கு இந்திய குடியுரிமை இருப்பதால் விடுதலைக்குப் பிறகு அவர் இங்கேயே வசித்து வருகிறார். நளினி - முருகன் தம்பதியின் மகள் பிரிட்டனில் இருப்பதால், முருகனுக்கு பாஸ்போர்ட் கிடைத்தால் இருவரும் பிரிட்டன் செல்ல விரும்புகின்றனர். இதற்கான விண்ணப்பங்களை நளினி சமர்ப்பித்திருக்கிறார்.

ஜெயக்குமாரை பொறுத்தவரை அவருடைய மனைவி இந்தியாவை சேர்ந்தவர். அவர் தனது மகன் பார்த்திபன் மற்றும் பேரக் குழந்தைகளுடன் சென்னையில்தான் வசித்து வருகிறார். ஆனால், பாஸ்போர்ட் கிடைக்கும் பட்சத்தில் ஜெர்மனியில் உள்ள தனது சகோதரருடன் சென்று வசிக்க ஜெயக்குமார் விரும்புவதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ராபர்ட் பயஸை பொறுத்தவரை, அவருடைய உறவினர்கள் நெதர்லாந்தில் வசிக்கின்றனர். ஆகவே அவர் நெதர்லாந்து செல்ல விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேர் தண்டிக்கப்பட்டனர். இதில் 13 பேர் இலங்கைத் தமிழர்கள். உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டபோது ஏழு பேரைத் தவிர மற்ற 19 பேர் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட 19 பேரில் 9 பேர் இலங்கைத் தமிழர்கள். இவர்கள் அனைவரும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அகதிகளுக்கான சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் பாஸ்போர்ட் வைத்திருந்த, முறையான விசாக்களில் இந்தியா வந்த 3 பேர் உடனடியாக இலங்கைக்குச் சென்றனர். மீதமிருந்தவர்கள் சில நாட்களில் இலங்கையிலும் அதன் பிறகு வெளிநாடுகளிலும் குடியேறினர். ●

